
# புதிய உலகம்

ஆடி - ஆவணி

1980



# புதிய உலகம்

நான்காவது ஆண்டு
மலர் — 22
ஆடி — ஆவணி 1980

பொறுப்பாசிரியர் :
ஜே. நீக்கிலஸ்

துணை ஆசிரியர் :
நாவண்ணன்

விநியோகப் பொறுப்பாளர் :
பிரான்சிஸ் டானியேல்

வெளியீடு :
கிங்ஸ்லி சுவாம்பிள்ளை

தொடர்பு :
" புதிய உலகம், "
த. பெ. எண் 2,
யாழ்ப்பாணம்.

"PUTHIYA ULAGAM"
P. O. Box 2,
Jaffna.

விலை ரூபா 1-00 ஆண்டுச் சந். 6-00

சிந்தனையூட்டும் சஞ்சிகை

## புதிய உலகிலே...

பக்கம்

| | |
|---|---|
| எமது பார்வை — | 1 |
| வாருங்கள் தோழர்களே | 3 |
| மறை இயல் ...... | 4 |
| எண்ணத்தில் உயர்ந்தவன் | 8 |
| சில கூண்டுக்கிளிகள் | 10 |
| பேய் ...... ...... | 14 |
| வழிகாட்டிய காக்கை ...... | 15 |
| உங்களுக்குத் தெரியுமா? | 18 |
| உங்கள் கவனத்திற்கு ...... | 20 |
| நாவல் தந்த நாயகர் ...... | 21 |
| இன்னொரு முயற்சி ...... | 26 |
| சித்திரச் சிற்பி ...... | 27 |
| புறப்படு தமிழா ...... | 31 |
| அவள் ஏன் கலங்குகிறாள் | 32 |
| இழந்துவிட்ட எனது பெலனை | 35 |
| கருத்துமோதல் ...... | 37 |
| அட்டைப்பட விளக்கம் ...... | 42 |
| விமர்சன அரங்கு ...... | 43 |
| கண்டதைக் கண்டபடி ...... | 35 |
| புதுமைப் பதில் ...... | 50 |
| உங்கள் பார்வை ...... | 53 |

படைப்புகளுக்குப் பொறுப்பு படைத்தவர்களே
கருத்துகளுக்கு உரியவர்கள் உரைத்தவர்களே ஆ—ர்

(FOR PRIVATE CIRCULATION ONLY)

க. நகனேந்திரன்
பூநாறி மரத்தடி
கொக்குவில்

# எமது பார்வை

## இலங்கை வானொலி நாடகத்தமிழ்

இன்றைய உலகின் முக்கியமான தொடர்பு சாதனங்களில் ஒன்று வானொலி. நமது நாட்டைப் பொறுத்த வரையில் அதன் சேவை பயனுள்ளதாக அமைந்திருப்பதுடன், அயல் நாடுகளே தமது நாட்டு ஒலிபரப்பு நிகழ்ச்சிகளைக் கேட்பதைவிட இலங்கை வானொலி நிகழ்ச்சிகளைக் கேட்பதில் ஆர்வம் காட்டுவதை நினைக்க எமக்குப் பெருமையாகவே இருக்கின்றது.

வானொலியில் தரமான நிகழ்ச்சிகள் பல இடம் பெற்றாலும் தமிழ் ஒலிபரப்பில் நாடகத்தமிழை நினைக்கும்போது தமிழர்களாகிய நாம் வேதனைப்பட வேண்டியுள்ளது,

வானொலி நாடக நடிகர்களும் யாழ்ப்பாணத்தில் பேசப் பாடாத யாழ்ப்பாண கொச்சைத் தமிழைப் பேசி 'போர்" அடிக்க வைக்கின்றனர்.

தமிழகத்தில் இருந்து வரும் பலரும் ஈழத்தில் பேசப் படும் இலக்கண நயமிக்க தமிழைப் புகழ்ந்து செல்லும் வேளையில் வானொலியில் மட்டும் எதற்காக இந்த இழிவைத் தமிழைப் பேசி யாழ்ப்பாணத் தமிழர்களின் மானத்தை வாங்குகின்றனரோ? இலங்கைக்கு வந்துபோகாத பிறநாட்டவர்கள் 'இலங்கையில் பேசப்படும் தமிழ் இது தானு' என்று ஏளனமாகக் கேட்கும் நிலையை உருவாக்கி வருகின்றனர்.

இதன் காரணம் என்ன? இலங்கை வானொலித் தமிழ் கலைஞர்களுக்கு கொச்சைத் தமிழைத் தவிர நல்ல தமிழில் பேசமுடியாத இயலாமையா? அல்லது தனிப்பட்ட ஒரு, சில நபர்களின் ஆதிக்கப்பிடிக்குள் நாடக நிகழ்ச்சிகள் சிக்கியிருக்கின்றனவா ?

அண்மையில் இதுபற்றி 'ஈழநாடும்' கண்டித்திருந்தது என்பதை நாம் கவனத்தில் கொள்ளவேண்டும்.

ஆனால் வானொலியின்மூலம் தூய தமிழில் பேசி, நடிக்கும் பெரும் பணியை ஈழத்து முஸ்லீம் சகோதரர்கள் தமது நிகழ்ச்சிகளின் மூலம் செய்து வருகின்றனர் என்பது பாராட்டத்தக்கது. எமது ஏனைய தமிழ்க் கலைஞர்கள் செய்யாத நல்ல தமிழ் பேசும் பணியை அவர்கள் செய்வதற்காக ஈழத் தமிழர்கள் நன்றி கூறவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

இன்னுமொரு விடயத்தையும் இங்கு சுட்டிக் காட்ட வேண்டிய கடப்பாடு எமக்கு உண்டு.

''ஸ்டைல்'' அறிவிப்புகளில் ஒருவித கவர்ச்சி உண்டுதான். ஆனால் அறிவிப்பவர்கள் தமது 'இழுப்புகள் நெளிப்புகள்' மூலம் எவ்வளவு வேகமாகப் பேசுகின்றார்கள் என்பதல்ல எவ்வளவு தெளிவாகச் சொல்லுகின்றார்கள் என்பதே முக்கியம். எனவே 'ஸ்டைல்'களைக் குறைத்து வானொலி பொதுமக்கள் தொடர்பு சாதனம் என்பதை உணர்த்தும் வகையில் மக்கள் விளங்கும் வகையில் அறிவிப்புகள் ஒலிபரப்புகளில் இடம் பெறுவதே வரவேற்கக் கூடியது.

அத்தோடு அறிவிப்பாளர்கள் கையாளும் வசனங்கள் கூட பொருள் தெரியாதவர்கள் பேசுவதுபோலல்லாது தாம் எதைச் சொல்லுகின்றோம் என்பதை உணர்ந்து சொல்ல வேண்டாமா? உதாரணமாக ''கியூவரிசை'', ''ஒரு தங்கப் பதக்கங்கள்'' என்பன போன்ற சொற் பிரயோகங்கள் அண்மைக் காலங்ளில் காதுகளில் நாரசமாகப் பாய்ந்தன. உலகப் புகழ் பெற்ற இலங்கை வானொலியில் இப்படியும் தடுக்கல் தமிழ்களா ?

இலங்கை வானொலியில் இந்தக் குறைகள் நிவர்த்தி செய்யப்படுமா ? ஈழத் தமிழின் மானம் காற்றில் கலக்க விடாமல் காப்பாற்றப்படுமா ? பொறுப்பில் உள்ளவர்களின் செவிகளில் பொதுமக்களின் சார்பில் குரல் எழுப்பும் 'புதிய உலகம்' சஞ்சிகையின் குரல் விழுமா?

# வாருங்கள் தோழர்களே!

எண்ணிப்பாரு வாழ்க் கையிலே—இங்கு
எத்தனைதான் வேற்று மைகள் நம்மில்
புண்ணிய மென் றென்று—இந்த
பூமியில் இல்லை எனலாம்.

உயர்ந்தவன் தாழ்ந்தவ னென்று—இங்கு
உயர்த்திப் பேசிடும் சாரார்
உயர்ந்தவ னென்றொரு சாதி—இங்கே
உண்மையில் அவன் படைக்கவில்லை.

சாதியோ இரண்டே யன்றி—வேறு
சாதிகள் பாரினில் இல்லை
பாதியில் பிரித்தார் இனத்தை—தமிழ்ப்
பண்பையே மறைக் கின்றனர்

இனங்கள்தான் பலவென்று சொல்லி—மானம்
இழந்து வாழு வாரிங்கே
மனங்கள்தான் அறமும் பாடி—உலகில்
மங்கள மாய் வாழ்வீர் நீரே!

நானடா முதலாளி யென்று—புவியில்
நானென்ற அகங்காரத் துடனே
ஏனடா இக் கெதியென்று—எண்ணி
ஏழைகள் அழு கின்றனர்.

உலகினை உயர்வுப் படுத்த—நல்ல
உயர்ந்த தோர் பாலம் அமைக்க
உலகியல் படைத்தவ னொருவன்—யாரும்
உண்மையில் இல்லை யெனலாம்.

வாருங்கள் தோழர்களே—இந்த
வாழ்க்கையை வளம் படுத்த
கோருங்கள் கோரிக்கையை—வாழ்க்கை
இனிமையாய் அமை வதற்கு.

பி. சிவப்பிரகாசம்




# விவிலியத்தில் புதுமைகள் தரும் புரியாத புதிர் (சென்ற இதழ் தொடர்ச்சி)

— அருட்திரு பி. ஏ. சின்னராசா அடிகள் —

இன்றைய மனிதனும் இப்பதுமைகளை விஞ்ஞான நோக்குடன் ஆராய விழைகின்றான். அவற்றிற்கான பல காரணங்களையும் விளக்குகின்றான். இவை எமக்கு எவ்வித பிரச்சினையும் இல்லாமல் ஏற்றுக்கொள்ளவும் உதவிபுரிகின்றது. அந்த நோக்கங்களுக்குக் காரணம் தெரியாமல் இருந்த அன்றைய மனிதனுக்கு, சூறுவளியையும் கடற்கொந்தளிப்பையும் புரிந்துகொள்ளாமல் இருந்தவனுக்கு இன்று காரணங்கள் தெரியும். இவற்றை மாற்றவும் தவிர்க்கவும் அவனுடைய அறிவுவளர்ச்சி உதவுகின்றது. இவ்வாறு சிந்திக்கத் தலைப்பட்டிருக்கும்போது யேசுவின் அருங்குறிகளைத் தெய்வீக செயல்களாக ஏற்றுக்கொள்வது பெரும் பிரச்சினைகளாக இருக்கலாம். ஆனால் அவை அன்றும் இன்றும் தருவது அடையாளங்களன்றோ. ஆகவே அவ்வடையாளங்கள் எடுத்துரைக்கும் உண்மையைத் தட்டிக்கழித்துவிட முடியாது. இன்றும் அவ்வடையாளங்கள் வழியாக எம்மிடம் இருந்து எதிர்பார்க்கப்படுவது விசுவாசம் ஒன்றே.

> கடவுள் மனிதருக்கு மட்டும் கொடுத்துள்ள ஒரே அரும் பொருள் அன்பே. அது நெஞ்சுடன் நெஞ்சை, உயிருடன் உயிரை பிணைக்கும் ஒரு வெள்ளித்தளை.
>
> — வால்டர் ஸ்கொட்

இன்னுமோர் இடத்தில் யேசு பெரும்பாடுள்ள பெண்ணைக் குணப்படுத்துகின்றார் (லூக் 8/43-48). அப்பொழுது அவர் கூறிய வார்த்தையிலிருந்து விசுவாசமே அவளைக் குணமாக்கிற்று என்று தெரிகின்றது, யேசு கூறுகின்றார் ''உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கிற்று. சமாதானமாய்போ. நோய்நீங்கி நலமாயிரு''. விசுவா

சம் கொண்டிருப்பதே ஒரு புதுமையாகும். ஆகவே விசுவாசம் என்னும் கொடையைப் பெறுவது ஒரு புதுமையாகும்.

யேசு புரிந்த புதுமைகளில் பேய்களை ஓட்டியதும், அசுத்த அரூபிகளை ஓட்டியதும் முக்கிய அம்சங்களாகும், யேசு வாழ்ந்த காலத்தில் உள்ள அம்மக்கள் பேய்களில் அதிகமான நம்பிக்கை வைத்திருந்தார்கள். ஆனால் யேசு கடவுளின் அரசின் நற்செய்தி

> முப்பதுக்குப் பிந்திய பருவம் கட்டாந்தரை போன்றது. ஏமாற்றம், தோல்வி, பயம், விரக்தி முதலானவற்றால் இறுகிப்போன களர் நிலம் அது. அதைக் கொத்தி, கிளறி, பண்படுத்தி விதை தூவினாலும் முளையாது. விதையே வெடித்துச் சிதறி விடும். அதில் சப்பாத்துக் கள்ளியும், முள் மரங்களும் ஓங்கி வளரலாம்.
>
> — செல்வி மீரா வ

யைப் போதித்தாரேயொழிய சாத்தானின் அழிவுக்குரிய ஆட்சியைப்பற்றிப் போதித்து மக்களைப் பயப்படுத்தவில்லை. அன்றேல் கற்பனை உலகில் எழுந்த பேய்க் கதைகளையோ சாத்தானைப் பற்றிய கோட்பாடுகளையோ எடுத்துரைக்கவில்லை. ஆனால் பாவம் காரணமாக அசுத்த அரூபிகள் ஆட்கொண்ட மக்கள் துன்புறுவதை இரக்கக் கண்களோடு நோக்கிய யேசு பேய்களையோட்டியதும், அசுத்த அரூபிகளை வெளிக்கொணர்ந்ததும், கடவுளின் அரசு அண்மையில் உள்ளது என்பதற்கும், சாத்தானின் ஆட்சிக்கு முடிவு நெருங்கிவிட்டது என்பதற்கும் அடையாளங்களாகும். இதைத்தான் புனித லூக்காஸ் எழுதிய நற்செய்தியில் ''வானின்று மின்னலைப்போல் சாத்தான் விழக்கண்டேன்'' (லூக். 10/18) என்று தெளிவாகக் கூறுகின்றார். யேசு இவ்வாறு அசுத்த அரூபிகளிடமிருந்து அடிமை நிலையை நீக்கி விடுதலையை அளித்தார். இறைவனின் புதிய படைப்பாகப் புதுவாழ்வு பெற்றனர். இந்நிகழ்ச்சிகள் அன்று மட்டுமல்ல இன்றும் யேசு கொணர்ந்த நற்செய்தியின் பகுதிகளாக விளங்குகின்றது. யேசுவின் வல்லமையும் வார்த்தையும் இவைகளை உறுதிப்படுத்துகின்றன. அவரின் வார்த்தைகள் இன்று உலகத்தினால், சமுதாயத்தினால் வெறுக்கப்பட்டவர்களுக்கு, ஒடுக்கப்பட்டவர்களுக்கு அடக்கப்பட்டவர்களுக்கு, பலவீனர்களுக்கு, துன்புறுவோருக்கு தென்புதரும் உணவாக அமைந்துள்ளது. இவர்கள் இதன் பயனைப்பெற யேசுவின் பணியாளர்கள் இந்நற்செய்தியை எடுத்துரைப்பது மட்டுமல்ல யேசுவின் வல்லமையோடு பல கோணங்களிலுமிருந்து அடிமைப்படுத்தப்

பட்ட மக்களின் அடிமைவிலங்கை தகர்த்தெறிய, அநீதியை நீக்கி நீதியை நிலைநாட்டப் போராட வேண்டும். அதிகார வெறியும் ஆணவங்களும், இலஞ்சமும் ஈவு இரக்கமற்ற செயல்களும், இன்றைய உலகில் மலிந்து காணப்படுகின்றது. இவற்றை எம்மவர் மத்தியிலிருந்து நீக்குவதே ஒரு புதுமையாகும். இப்புதுமையின் வழியாகச் சுகம்பெறுவோர் புது வாழ்வு பெறுவோர் ஆயிரம் ஆயிரம். குறுகிய கண்ணோட்டத்தில் தன்னலம் கருதி வாழ்ந்தவர்களின் கண்கள் பார்வை பெறுவதற்கு, சமுதாய அவலக்குரலைக் கேளாத செவிடர்கள் காதுகள் திறப்பதற்கு, யேசுவின்நற்செய்தி இன்றும் உயிருள்ள நற்செய்தியாகக் கருதப்படுகின்றது. யேசுவிடமிருந்து புறப்படும் வல்லமையின் ஒளி பரவத்தொடங்கிவிட்டது. அது எம்மிடையே உள்ளதென்பதை ஒவ்வொரு கிறிஸ்தவனும் உணரவேண்டும்.

யேசுவின் புதுமைகள் மட்டும் எதையும் நிரூபிக்கப்போவதில்லை, ஆகவே புதுமைகளை வரலாற்று ஆய்வுக் கண்கொண்டு அலசி ஆராய்ந்து முடிவுகள் எடுப்பது பயனற்றதொன்றாகும். ஏனெனில் கிறிஸ்தவ விசுவாசத்தில் இவைமட்டும் முக்கியபங்கு எடுப்பதில்லை. யேசுகூடத் தன் பணியின்போது அருங்குறிகளைமட்டும் நம்பி வாழ்வு பெறுகின்றவர்களுக்கு ''இத் தலைமுறைக்கு அருங்குறிகள் எதுவும் அளிக்கப்படாது'' (மாற், 8-12) என்று கூறுகின்றார்.

யேசுவின் வார்த்தையிலிருந்து செயல்களை வேறுபடுத்த முடியாது. உதாரணமாக அப்பத்தைப் பலுகிப் பல்லாயிரக் கணக்கானோருக்கு உணவு பரிமாறியதன் வாயிலாக யேசுவே உயிர்தரும் உணவாக மாறுகின்றார் (லூக். 16-18). குருடருக்குப் பார்வை அளிப்பதன் வாயிலாக உலகின் ஒளியென அழைக்கப்படுகின்றார் (மாற். 5-32). ஆகவே விஞ்ஞான வளர்ச்சியோ எம்மைத் திருப்திப்படுத்தக்கூடிய விளக்கங்களோ, புதுமைகளில் முக்கியத்துவத்தையும், குறிக்கோளையும் குழிதோண்டிப்புதைக்கப்போவதில்லை, என்பது திண்ணம். யேசுவின் புதுமைகள் காலத்திற்கும், நேரத்திற்கும் உட்பட்டதல்ல என நன்றாக நாம் நம்ப முடிகின்றது.

ஈற்றில் பொதுவாக எம் சமுதாயத்தை நோக்கும்போது புனிதர்களிடம் புதுமைகளைப் பெற்று விடுவோம் என்று பல்லாயிரக் கணக்கான மக்கள் புனிதஸ்தலம் செல்கின்றார்கள், அந்தப் புனிதன், புனிதைகளுக்கு எத்தனையோ ஆராதனைகளைச் செலுத்துகின்றார்கள். உலகில் அதி தலைசிறந்து விளங்கும் லூர்து நகர் பற்றிச் சிந்திக்கும்போது, உலகின் பல திக்குகளிலுமிருந்து மக்கள்

புதுமைகள் நிகழவேண்டும் என்று செல்கின்றனர்கள். ஆனால் எல்லோரும் சுகம்பெற்று விடுகின்றனர்கள் என்று கூறமுடியாது' ஆனால் அவர்களின் அத்திரு யாத்திரை விசுவாச வாழ்வுக்கு அவர்களை அழைத்துச் சென்றிருக்கின்றது. விசுவாசம் என்பது ஓர்அரிய கொடையாகப் பெரிய புதுமையாக அருளப்பட்டுள்ளது. அவ் விசுவாசத்தினால் அவர்கள் தங்கள் வருத்தத்தையே மறந்தவர்களாக வீடு திரும்புகின்றனர்கள். விசுவாசம் என்பது ஒரு மகா சமுத்திரம். அவர்கள் நாடிச் சென்றதோ மகா சமுத்திரத்தின் ஒரு துளியையே. இன்று அவர்களுக்குத் தேவையானது புலன்களுக்குத் தேவையான புதுமைகள் அல்ல. வாழ்விற்குத் தேவையான விசுவாசம். இதுதான் மாபெரும்புதுமை. இதைத்தான் அன்றும் கிறிஸ்து தம்மை நாடி வந்தோர்க்கு அளித்தார். இன்றும் அளிக்கின்றனர். இன்றும் புதுமைகள் இங்கும் எங்கும் நிகழுகின்றன. இவை எமக்குப் புதிதாக இருக்கலாம். ஆனால் புதுமைதரும் புதிர் இதுதான்.

ஆக்கத்திற்கு வழிநின்ற நூல்கள்


1. *Hans Küng, "On Being a christian" Collins London*1977
2. *Walter Kasper,* "**Jesus the** *Christ" Burns&Oates London* 1977
3. *Peter de Rosa, 'Jesus who became Christ' London* 1977


இந்நாடு இன்னும் சுதந்திரம் பெறவில்லை. சீதனப் பிரச்சனையால் வாழாது பெண்களினம் மாளும் இந்நாட்டில் ஏது சுதந்தரம் ?

காதலுக்கும் காமத்திற்கும் தொடர்பேயில்லை — கட்சிக்கும் கொள்கைக்கும் தொடர்பில்லாததுபோல, காதல் வேறு, காமம் வேறு.

நூலைக் கெட்டியாகப் பிடிக்கும்போதுதானே பட்டம் உயரப் பறக்கிறது. நூலைவிட்டால்.......... கட்டுப்பாட்டிற்குள் இயங்கும்போதுதான் மனிதன் உயர்ந்தவனாக முடியும். அதைவிட்டு வீணே சுதந்திரம் தேவை என அலட்டிக்கொள்வதில் அர்த்தமேயில்லை.

தொகுத்தவர் —தோமஸ் மரிராதாஸ்

## உருவகம்

★ காவலூர் எஸ். ஜெகநாதன்

# எண்ணத்தில் உயர்ந்தவன்

புத்தகங்களைப் பூக்கள் போன்று பாதுகாக்க வேண்டும் என்பார்கள். கடைக்காரன் கற்கள் என்று நினைத்துவிட்டான் போலும். சுட்டெரிக்கும் அந்த வெய்யிலில், கடைக்காரன் முன்னால் பரப்பி வைக்கப்பட்ட புத்தகங்கள் காய்ந்துகொண்டிருந்தன. சுழன்று வீசிய காற்று மண்ணை வாரி வீசியது. கடைக்காரன் எழுந்து வந்து துடைத்துவிட்டான். அப்போதும் புத்தகங்கள் வெய்யிலில் வெளிறுவதைப்பற்றி அவன் பொருட்படுத்தவில்லை.

புத்தகங்களுக்கு கடைக்காரன் மீது ஒரே ஆத்திரமாக இருந்தது. இருந்தும் கோபத்தை அடக்கிக் கொண்டு பல்லைக் கடித்தபடி அமர்ந்திருந்தன.

அனைத்துமே சஞ்சிகைகள். வாரத்துக் கொன்றாக மாதத்துக் கொன்றாக வெளிவந்து வாசகர்களின் கைகளில் தவழும் சஞ்சிகைகள். அழகழகான அட்டைப் படங்களுடன் கூடிய தமிழ் நாட்டுச் சஞ்சிகைகளும் கவர்ச்சியில்லாத ஈழத்து சஞ்சிகைகளும் இருந்தன. நிரையாக, கட்டுக் கட்டாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த தமிழக சஞ்சிகைகளின் முகப்புக்களில் பெண்களின் வண்ண வண்ணப் படங்கள், நடிக நடிகையரின் படங்கள் எல்லாமே வண்ணச் சாந்து.

ஒரு மூலையில் அமைதியாக அமர்ந்திருந்தது ஈழத்துச் சஞ்சிகைக்கட்டு. அதன் முகப்பில் வண்ணக் கலப்புகள் இல்லை. அழகான பெண்கள் இல்லை. தலைப்பு மட்டும்தான். தன்மீதும் கவனத்தைத் திருப்பமாட்டார்களா என்று கவலையுடன் இருந்தது. 'சினமன் கார்டினில்' நடக்கும் ஒரு 'பார்ட்டி'க்குச் சென்ற ஏழை எழுத்தாளனின் நிலையில் ஈழத்துச் சஞ்சிகை கூனிக்குறுகி அமர்ந்திருந்தது.

தமிழகத்துச் சஞ்சிகைக்குத் திமிர். பக்கத்தில் இருந்த ஈழத்துச் சஞ்சிகையைச் சீண்டி வேடிக்கை பார்க்கும் ஆவல். ''பார்த்தாயா என்னைத்தான் எல்லாரும்

எவ்வளவு ஆசையுடன் வாங்கு கிறார்கள். அணைக்கிறார்கள். ம்...... நீயும் இருக்கிறாயே'' ஈழத்து சஞ்சிகைக்கு பொறுமை எல்லை கடந்துவிட்டது. ''எல்லோரையும் உன் 'அழகு' காட்டி மயக்குகிறாய். மானம்கெட்ட பிழைப்பு தூ இதுவும் ஒரு வாழ்வா''

''பொறுமை உனக்குக் கூடி விட்டது. இளமை எனக்குக் கை கொடுக்கிறது'' என்று இறுமாப்புடன் கூறியது தமிழக சஞ்சிகை. ''இந்த மாயைகள் என்றைக்கும் நிலைச்சிருக்காது. மின்னல் மாதிரி அழிஞ்சு போயிடும்'' என்று சொல்லிப்பார்த்தது ஈழத்துச் சஞ்சிகை. தமிழகத்துச் சஞ்சிகைக்கு சிரிப்புச் சிரிப்பாக வந்தது. ''கையாலாகாதவனுடைய பேச்சு இது. ஏன் இன்னும் அமர்ந்திருக்கிறாய் மூட்டையைக் கட்டிக் கொண்டு போகவேண்டியதுதானே.''

அறிவற்று அகந்தையில் துள்ளிக் குதிப்பவனிடம் நமக்கென்ன பேச்சு என்று எண்ணிக்கொண்டு மௌனமாக இருந்தது ஈழத்துச் சஞ்சிகை.

புத்தகக் கடையின் முன்னால் வந்து நின்றான் ஒருவன். இளம் குடும்பஸ்தனாகத்தான் இருக்க வேண்டுமென்று அவன் தோற்றம் கூறியது. அவன் கைகள் ஆசையோடு தமிழகத்துச் சஞ்சிகையை வாரி எடுத்தன. ஏளனத்தோடு ஈழத்துச் சஞ்சிகையை திருப்பிப் பார்த்துக் கொண்டே அவன் கையில் பெருமையோடிருந்தது.

ஈழத்துச் சஞ்சிகையைப் புரட்டிப்பார்த்தவன் அதிலும் ஒன்றை வாங்கினான். ''எப்படி'' என்று கேட்பதுபோல் பார்த்துவிட்டு தமிழக சஞ்சிகையுடன் சமமாக அமர்ந்தது ஈழத்துச் சஞ்சிகை.

மாலைவேளை. அவன் வேலை முடிந்து வீட்டுக்கு வந்துசேர்ந்தான். ஆசையோடு எதிர்ப்பட்ட மனைவி அவனிடமிருந்த இரண்டு சஞ்சிகைகளையும் வாங்க முற்பட்டாள். அவன் ஏமாற்றிவிட்டு ஈழத்துச் சஞ்சிகையை எடுத்துக் கொடுத்தபடி கூறினான். ''இந்தா இதை நீயும் படி......பிள்ளையளுக்கும் குடு'' அவள் கவனம் தமிழகத்து சஞ்சிகையில்தான் இருந்தது. ''இந்தப் புத்தகத்தைப் பிள்ளையளின்ர கண்ணில பட விடாதை. அப்புறம் உருப்பட்ட மாதிரித்தான். இதை நாம ரெண்டுபேரும் இரவு படிச்சிட்டு ஒளிச்சு வைச்சிடனும்'' என்றபடியே மனைவியிடம் தமிழக சஞ்சிகையைக் கொடுத்தான்.

ஈழத்துச் சஞ்சிகை சந்தர்ப்பம் பார்த்துக்கூறியது ''பார்த்தாயா நான் நல்ல மனங்களில் வாழ்கின்றேன். நீ நச்சு மனங்களில் வாழ்கின்றாய். நீ எண்ணிக்கையில் உயர்ந்தவன். நான் எண்ணத்தில் உயர்ந்தவன்''.

தமிழகத்துச் சஞ்சிகை தலை குனிந்து கொண்டது.

சன்மானம் பெறும் சிறு கதை

# சில கூண்டுக் கிளிகள்



# விடுதலைக்காக ஏங்குகின்றன....

—தலவின்னையூர் புன்னியாமீன்—
13, உடத்தலவின்ன
கட்டுகஸ்தோட்ட

''மனுசனுப் பொறக்குறத விட பொறக்காம இருக்கிறது மேல்..........அப்படிப் பொறக்க வேண்டுமென்றே எழுதியிருந்தா கா ஆடு, மாடாகப் பொறந்திருந் தாக்கூட வாழப்போறகொஞ்ச காலத்தையேனும் நிம்மதியாகக் கழிச்சிடலாம்..........'' உம்மா தனக்குள்ளேயே நொந்துகொண் டாள். பாவம், சிந்தித்துச் சிந் தித்து எழும்பும் தோலுமாக இருந்த அவளை யாரும் கண்டால் டி.பீ.காரியொருத்தி என்றுதான் சந்தேகப் படப் போகிறுர்கள்.

என்ன செய்ய......? நானும் சிந்திக்காமல் இல்லை. என்னு டைய சக்திக்கெட்டியவரை சிந் திக்கத்தான் செய்கின்றேன். அந்த ஒவ்வொரு முகங்களையும் பார்க்கின்ற போதெல்லாம் என் னிதயம் என்னையறியாமலே அழும். நானும் சாதாரண மனிதன் ஒருவனல்லவா?

—நஸிமா—ஹிதாயா — பரீனு — பாயிஷா — மஸிதா—கடைசி யாக யெஸ்மின்.

அதோ நஸீமா தாத்தா நிலத் துல உட்கார்ந்தபடி புத்தகம் படித்துக் கொண்டிருக்கின்ருள்...... என் விழிகள் சிறிதுநேரம் அவ ளையே எடைபோட்டன,

புத்தகத்தில் இவளுடைய விழிகள் படிந்திருந்தாலும், சிந்தனைகள் எங்கோ..................ஏதோ.................. இது அவளுடைய தவறு இல்லை. முப்பத்தி இரண்டு வயதைக் கடந்து முக்கால் கிழவியாகிவிட்ட அவளால் நன்றாகச் சிந்திக்க முடியும்.

சத்தியமாக நான் மனம் விட்டேகூறுகின்றேன். ''மனிதன் ஏழையாகப் பிறப்பதைவிட பிறக்காமல் இருப்பதே மேல்.''

ஏழையான குடும்பத்திலேயே பிறந்த என்னுடைய வாப்பா, உழைக்கும் பராயம் வந்ததும்,

> அறிவும் திறமையும் பெறுவது மட்டுமல்ல கல்வியின் குறிக்கோள், பிறருடன் ஒற்றுமையாய் வாழ நம்மைப் பக்குவப் படுத்துவதே அதன் முக்கிய நோக்கம்.
>
> —டாக்டர் ராதாகிருஷ்ணன்

கூலிவேலை செய்து உழைத்திருக்கின்றார், ஆனா, ஆவன்னா என்று அரிச்சுவடி படிக்கவில்லை. அன்று அவருக்குத் தேவைப்பட்டதெல்லாம் உழைப்பால் கிடைக்கும். ஊதியத்துக்கு அன்றாட வயிற்றுச் சோறு. எப்படியிருந்தாலும் என் வாப்பா ஒரு துணிச்சல் பேர்வழிதான். கூலி வேலையையே நம்பி உம்மாவைக் கலியாணம் செய்துகொண்டு, என்னோடு சேர்த்து ஏழு வாரிசுகளை இந்தப் பூமிக்குப் பாரமாக்கிவிட்டாரே...... வாப்பா வாழ்ந்த சமூகத்தின் தவறுதான் அது. ஏழையாகப் பிறந்த அவருக்கு ஒரு பொழுதுபோக்கு வேண்டாமா? அதற்காகத்தானே உம்மா இருக்கின்றாள். எப்படியோ...... என் வாப்பாவுக்கு நான் கடமைப்பட்டவன். ஒரே மகன் என்று என்னைச் சாப்பிட்டோ, சாப்பிடாமலோ நன்றாகப் படிக்க வைத்துவிட்டார். அவர் போட்ட பிச்சையில்தான் இன்று நான் எட்டுநூறு ரூபாய் சம்பளம் எடுக்கிறேன். அதேநேரம் சமுதாய வரம்புகளை மீறி, என்னை புதிய மனிதனாக்கி, புதிய உலகத்துக்கு அறிமுகப்படுத்தி வைத்த வாப்பாவுக்கு தலைவணங்கவேண்டியது என் கடமையல்லவா ?

நஸீமா......குடும்பத்தில் மூத்தவள். அவளுக்கடுத்ததாக நான். எனக்குப்பின் இன்னும் ஐந்து சகோதரிகள். கடைசித் தங்கச்சி யெஸ்மினைத் தவிர அடுத்த எல்லோரும் பருவமடைந்து விட்டவர்கள். இன்னும் இரண்டொரு மாதங்களில் யெஸ்மினும் பெரிய மனுஷியாகி விடுவாள்......

மெழுகுவர்த்தியாக உழைத்த வாப்பா இரண்டு வருடங்களுக்கு முன் மவுத்தாகிவிட்டார். நல்ல

நேரம் எனக்கு அந்தச் சமயத்தில் தொழில் கிடைத்துவிட்டது. இல்லாவிட்டால் இன்று எமது குடும்பமே பாதையில்தான்........... குடும்பத்தில் ஒரே மகனுன எனது தலையில் குடும்பப் பொறுப்புக்கள் சுமத்தப்பட்டு விட்டன...... எடுக்கின்ற சம்பளம் குடும்பச் செலவுகளுக்கே சரி.

என் சகோதரிகளைக் கரை சேர்க்க வேண்டியது என் பொறுப்பு. சகோதரிகள் படிக்காவிட்டாலும் வயது வந்த அவர்களால் நன்ருகச் சிந்திக்க தெரியும். அவர்களுடைய ஏக்கங்கள்...... பெண்மையின் தாபங்கள்...... பெண்மையின் நிறைவைத்தேடும் போது பரிணமிக்கும் உணர்வுகள்......ஆண்டவனே! அந்தக் கூண்டுக் கிளிகளுக்கு எப்போதுதான் விடுதலையோ?

உம்மாவால் யோசிக்க மட்டும் தான் முடியும். கூடினுல் கண்ணீர் விடுவாள். அவளால் இதற்கு விடைகாண முடியாது. உம்மாவை நினைக்கும்போது தான் எனக்கும் வேதனையாக இருக்கிறது. முன்பு 'தடிச்சி' என்று பெயரெடுத்தவ, இன்று எலும்பும் தோலுமாக, பாதையில்கூட நடக்க சீவனற்ற நிலையில்......தனது பெண்பிள்ளைகள் வளர, வளர அவளுடைய வேதனைகள் வளர்ந்ததில் ஆச்சரியமில்லையே......

இந்தக் காலத்தைப் பொறுத்த வரையில் ஒரு குமரைக் கரை சேர்ப்பது இலேசான காரியமா? குறைந்த பட்சம் பத்தாயிரமாவது வேண்டும். சீதனமாம், பெரிய சீதனம்...... ஆனுல் இவற்றைப் பற்றிச் சிந்திக்கத் தெரியாதவர்கள் எனக்குத் திருமணம் பேசி நாள்தோறும் வந்துசெல்கின்ருர்கள். நான் திருமணம் முடித்து வீட்டை விட்டுச்சென்று விட்டால் என் சகோதரிகளின் நிலை...... என் குடும்பத்தின் நிலை...... நினைக்கவே பயமாக இருக்கின்றது. ஆபிஸில்கூட என்னுல் ஒழுங்காக வேலை செய்யமுடிவதில்லை. ஒவ்வொரு ஃபைலைப் புரட்டும்போதும் நஸீமா, ஹிதாயா, பரீனு ...... வீட்டிலும் நிம்மதியில்லை. அந்த முகங்களைப் பார்க்கையில்...........உம்மாவைப் பார்க்கையில்...........

சீதனம்—சீதனம் எனும் வரட்டுப்பிடி சமுதாயத்தை விட்டே அழியட்டும்.

நாலைந்து மாதங்கள் கழிந்து விட்டன.

நான் ஒருமுறைக்கு நூறுமுறை யோசித்து இந்த முடிவுக்குச் சம்மதித்துவிட்டேன். ஆமாம், சென்ற வாரம் எனக்குத் திருமணம் பேசி ஒரு தரகர் வந்தார். பெண்வீட்டார் பணக்காரர்களாம். ஐம்பதாயிரத்துக் குறையாத சீதனம் தருவார்களாம். அவர்களுக்குத் தேவை என்னைப்போல சிகரெட் பீடி புகைக்காத, 'குடி'கள் பாவிக்காத ஒரு ஒழுங்கான ஒழுக்கமான அரசாங்க உத்தியோகத்தர்தானும்......

—நான் எப்படியும் இந்தத் திருமணத்துக்குச் சம்மதிக்க

வேண்டும். பெண் எப்படியோ...... சுளை, சுளையாக ரொக்கம், வீடு நகை எல்லாம் கிடைக்கின்றது. இந்தச் சந்தர்ப்பத்தைக் கைவிட்டால் இதுபோன்றவொரு சந்தர்ப்பம் என் வாழ்க்கையிலேயே வராது.

—சம்பிரதாயத்துக்காகப் பெண் பார்க்கச் சென்றேன்.

—நல்ல கருப்பு, சப்பையான மூக்கு, முன் பற்கள் இரண்டும் நீண்டு......அவள் அழகாக இருந்தாள் என்று மனநிம்மதிக்காகச் சொல்லிக் கொள்ளலாம்.

—ஆனல் நான் திருமணத்துக்காக மறுக்கவில்லை.

உம்மா அழுதாள். அவவுக்கு என்னுடைய செய்கைகள் ஒரு துரோகமாகப் பட்டிருக்கலாம். பாவம், என்னுடைய அடிப்படையை அவ தெரிந்துகொள்ளவில்லை.

திருமணம் நடந்து முடிந்தது.

—ஊரார் என்மீது ஆயிரம் அவச் சொற்களைச் சொன்னர்கள்.

—உம்மா இப்போதெல்லாம் என்னேடு சரியாகப் பேசுவது கூட இல்லை.

—சகோதரிகள் என்னை அற்ப பொருளொன்றைப் பார்ப்பது போல பார்த்தார்கள். அதாவது சாக்கடையாக.

நான் அமைதியாக இருந்தேன். சந்தர்ப்பம் வரும் அப்போது புரிந்துகொள்ளட்டும்.

''உம்மா ........... நஸீமாவுக்கும், ஹிதாயாவுக்கும் கலியாணம் பேசுங்க ......'' நான் உம்மாவிடம் சொன்னதும் ஆச்சரியமாக என்னைப் பார்த்தாள்.

''என்ன உம்மா அப்படிப் பார்க்கிறீங்க...........அந்தப் பாக்கியத்த நான் கொடுக்கல்ல அப்புடன்னு பார்க்கிறீங்களா ...........? இல்ல உம்மா...........எல்லாம் காரணத்தோட தான் நான் நடந்தேன். இப்ப பாருங்க நான் எடுத்த சீதனத்தால என் சகோதரிகளை கரை சேர்த்துடலாமெல்ல......''

''மகனே......''

சகோதரிகளுக்கு கலியாணம் பேசும் படலம் ஆரம்பமாயிற்று.

—சீதனம்

—உங்க மகன்எடுத்ததப்போல எங்களுக்கும் சீதனம் தந்தா உங்க மகளைக் கட்டிக்கிறேன்.

—உங்க மகன் எழுபத்தி ஐந்து எடுத்தான். வீடு, நகை எல்லாம் எடுத்தான். நாங்க அவ்வளவு கேட்கல்ல ஐம்பது ரொக்கமாகத் தாங்க அப்ப உங்க மகளைக் கட்டிக்கிறோம்.

நான் பாவி. எடுத்த சீதனப் பணத்தைக் கொண்டு ஆறுசகோதரிகளையும் கரைசேர்த்து விடலாம் என்று பார்த்தால்...........!

''ஆண்டவனே இதுபோன்ற சோதனை யாருக்குமே வரவேண்டாம்''

அந்தக் கூண்டுக் கிளிகளுக்கு எப்போதுதான் விடுதலையோ?

**(யாவும் கற்பனையே)**

# பேய்



வயிறிருந்தும் பசியென்றால் வறுமை ஒரு பேய்
வளமாக வாழ நினைப்போர்க்கு பணமொரு பேய்
மயிர் வளர்க்கும் இளைஞர்க்கு நாகரீகம் பேய்
மற்றவரைச் சுரண்டுகின்ற மனிதனொரு பேய்

கல்வி கொஞ்சம் கற்றுவிட்டால் உத்தியோகம் பேய்
காளையர்கள் வாங்குகின்ற சீதனமும் பேய்
கொலையினிலும் கொடியதாம் சூழ்ச்சி ஒரு பேய்
கொடுத்து வட்டி வாங்குபவன் கொடிய பேய்

கொடியதிலும் கொடியதாம் அடிமை வாழ்வு பேய்
குலம்சாதி பேசுவோர் கொள்ளிவாய் பேய்
கொடிபோல நடைபயிலும் விலைமாதர் பேய்
கோதையரைக் கெடுக்கின்ற காமுகன் பேய்

மனச்சாட்சி இல்லாத மனிதன் ஒரு பேய்
மங்கையரைக் கண்டுவிட்டால் மனமொரு பேய்
கணவனுக்குப் பணியாத மனைவியொரு பேய்
களவெடுத்துப் பிழைக்கின்ற திருடனொரு பேய்

நயவஞ்சகனின் நட்பு நல்லவர்க்குப் பேய்
நம்தமிழர் சமூகத்தில் ஏற்றத்தாழ்வுப் பேய்
தூயதமிழ் ஈழத்தில் கயவனொரு பேய்
தொடைநடுங்கித் தலைவர்கள் எமக்குள் ஒரு பேய்

—திராவிடதாசன்

சிறுகதை

# வழிகாட்டிய காக்கை

ஐரோப்பாக்கண்டத்தில் ஸ்கேன்டினேவியா என்ற நாடு இருக்கின்றது. அங்கு ''வைக்கிங்ஸ்'' என்ற பெயருடைய கூட்டத்தினர் வசித்து வந்தனர். இவர்களுடைய முக்கிய தொழில் கடலில் மீன்பிடிப்பதுதான். இவர்கள் மீன்பிடிக்கச் செல்லும் ஒவ்வொரு தடவையும் வீடு திரும்புவோமோ என்ற சந்தேகத்துடன் தான் செல்வார்கள். ஏனெனில் அவர்கள் புறப்படும்பொழுது மேகம் நன்ருகவே இருக்கும். ஆனுல் திரும்பும்பொழுதோ வானம் இருண்டு புயல் வீசத் தொடங்கிவிடும். இந்நிலேயில் அவர்கள் திசைதெரியாமல் திண்டாடுவார்கள், அதிர்ஷ்டவசமாக மேகம் கலேந்து வெளிச்சம் வந்தால் தப்புவார்கள், இல்லேயென்ருல் அவர்கள் வாழ்நாட்களில் வீடு திரும்பவே மாட்டார்கள். இந்நிலேயில் இவர்கள் வாழ்க்கையைக் கடத்தி வந்தார்கள்.

இப்படி இருக்கும்பொழுது அப்பகுதியில் நீல்ஸ் என்னும் சிறுவன் தன் பெற்ருேர்களுடன் மீன் பிடிக்கச்சென்று திரும்புவதுண்டு. ஒருமுறை மீன்பிடித்துத் திரும்பி வந்து கரை சேர்ந்தபொழுது இவனுடன் வந்த ஒலாஃப் என்ற கிழவன் வானத்தை அண்ணுர்ந்து பார்த்துச் சொன்ஞன் ''வானிலே சரியில்லே ! நாளேக்குப் புயல் வீசும்'' என்று, எல்லோரும் அவன் சொல்லேக் கேட்டுச் சிரித்தனர். ஆனுல் நீல்ஸ் மட்டும் வானத்தைப் பார்த்தான், சில காக்கைகள் மட்டும் கா, கா. என்று கத்திக்கொண்டு பறந்து சென்றன.

> அணுக்குண்டுக்கு மனிதன் அசையாது நிற்கவும் கூடும். ஆனுல் அன்பு கனிந்த சொற்களின்முன் அவன் பின்னடையத்தானே வேண்டும்.
>
> — காண்டேகர்.

எல்லோரும் கிழவன் சொன்னதை மறந்து விட்டார்கள்.

ஆனுல் நீல்ஸ் மட்டும் இரவு தூங்காமல், ஏதோ ஒரு முடிவுசெய்து கடைசியில் தூங்கிவிட்டான். மறுநாள் காலையில் மீனவர்கள் புறப்படும்பொழுது, நீல்ஸ் இடுப்பில் ஒரு கூடையைக் கட்டிக் கொண்டு வந்தான். எல்லோரும் அதில் என்ன இருக்கிறது என்று கேட்க, ''அதை நான் பிறகு சொல்கிறேன்'' என்று விட்டு நேரே படகுத் தலைவனிடம் சென்முன் ''அண்ணு! அண்ணு! தயவுசெய்து இக்கூடையை மட்டும் கொண்டுவர அனுமதி கொடுங்கள்''என்முன். தலைவன் சிரித்துக்கொண்டே ''அப்படி அதில் என்ன கொண்டுவந்தாய்'' என்று கேட்க, ''அதை நான் இப்பொழுது சொல்லமாட்டேன் ஆனுல் கடலில் வழி காட்ட அது உதவும் அண்ணு'' என்முன் கெஞ்சும் குரலில்.

> கல்வி என்பது ஒருவனுடைய மூளையில் பல விடயங்களைத் திணித்துவிடுவதன்று. கற்கும் பொருள்கள் உயிர் ஊட்டுவனவாய், மனிதத் தன்மை தருவனவாய், ஒழுக்கம் அமைப்பனவாய் இருக்க வேண்டும்,
>
> — சுவாமி விவேகானந்தர்.

தலைவனுக்கோ நம்பிக்கை இல்லை, கடலில் வழிகாட்ட எத்தனையோ யந்திரக் கோல்களையும் தந்திரக் கருவிகளையும் பார்த்தவன் அவன் ''அதெல்லாம் சரி தம்பி! இதில் இடமில்லை, இந்தக் கூடையை வேறு எங்கே வைப்பது'' என்முன், ''அண்ணு! தயவுசெய்து ஒருமுறை மட்டும் அனுமதி கொடுங்கள்' கொடி மரத்தின் உச்சியில் இதைக் கட்டி விடுகிறேன்''என்று கெஞ்சினுன்.

தலைவனும் ஒப்புக்கொள்ளவே நீல்ஸ் அதைக் கொடிமரத்தின் உச்சியில் ஏறிக் கட்டினுன். படகும் புறப்பட்டது. அன்று மீனவர்களுக்கு நிறைய மீன் கிடைத்தது. வீடு திரும்பும்பொழுது இருந்தாற்போல் வானம்இரண்டு புயலும் வீசத் தொடங்கியது. படகிலிருந்த அனைவரும் பயந்து நடுங்கத்தொடங்கினர். படகோட்டிகள் செய்வதறியாது விழித்தனர். திடீரென அந்தப் படகுத் தலைவனுக்கு நினைவு வந்தது ''நீல்ஸ்! எங்கே உன் திசை காட்டும் கருவி?'' என்முன், எல்லார் கண்களும் அவன் பக்கம் திரும்பின.

அவன் எழுந்து நேராகக்கொடி மரத்தின்மேல் ஏறிக் கூடையின் வாயை அவிழ்த்து விட்டான், திடீரென அக் கூடையிலிருந்து ஒரு காக்கை, வெளியே வந்து படகை ஒரு சுற்றுச் சுற்றி, கா! கா! என்று கரைந்துகொண்டு, படகு போகும் எதிர்த்திசையில் பறந்து மறைந்தது. உடனே

நீல்ஸ் சந்தோஷத்தோடு "அப் பக்கம்தான் நம் ஊர் இருக்கிறது" என்றான்.

படகும் அத்திசையில் திருப்பப்பட்டது. ஒருமணிநேரத்தில் கரைவந்து சேர்ந்துவிட்டார்கள். காலையில் அச்சிறுவனை எள்ளி நகையாடிய அனைவரும், அவன் புத்திக் கூர்மையை மெச்சி, வாயார வாழ்த்தி, மனமாரப் புகழ்ந்தனர். நீல்ஸ்சுக்கு வெட்கம் வந்துவிட்டது. "எல்லாம் காக்கை காட்டிய வழி நான் என்ன செய்தேன்" என்று சொல்லி ஓடிவிட்டான்.

நாளடைவில் ஸ்கேன்டிநேவியா நாடுமுழுவதும் மீனவர்களுக்குக் காக்கைகளே வழிகாட்டும் துணைகளாயின. பின்னர் அப்பழக்கம் அண்டை நாடுகளுக்கும் பரவியது. காந்த ஊசி கண்டு பிடித்த பின்னர்தான், காக்கை பிடித்து அடைக்கும் பழக்கத்தைக் கைவிட்டார்கள்.

ஆனால், இன்றும் அதன் ஞாபகார்த்தமாகப் படகுகளிலும், பெரிய கப்பல்களிலும், கொடி மரத்தின் உச்சியில் திசைபார்க்கவும், காவல் காக்கவும் உதவுகின்ற இடம் "காக்கைக் கூடு" (Crow's nest) என்று வழங்கப்படுகின்றது.

B. A. N. வீரேந்திரா,
சம்பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

மனிதனின் கல்விப் பயிற்சி என்பது, அவனுக்கு அத்தியாவசியமான அறிவைப் புகட்டுவது மட்டுமல்ல. அவனது உள்ளத்தையும் சமூகவுணர்வையும் அபிவிருத்தி செய்வது மட்டுமல்ல; அவனுடைய உணர்ச்சிகளையும் உள்ளக் கிளர்ச்சிகளையும் பண்படுத்தி வளர்ப்பதுமாகும்.

— யாரோ.

வாழ்வில் ஏற்படும் பிரச்சனைகளை சமாளிக்கும் திறமையே கல்வி ஆகும்.

— ஹிப்பன்.

ஒருசெடி வளர்வதற்கு என்னென்ன தேவையோ அதைப்போன்று மனிதன் பண்பாட்டையும் மேலான அறிவையும் பெறுவதற்குக் கல்வி அவசியம்.

— ரூஸோ.

# உங்களுக்குத் தெரியுமா?

★ கல் ஒன்றை அல்லது ஒரு திடப் பொருளைச் சுவரில் எறியும்போது அது சுவரில் மோதி அப்படியே நிலத்தில் விழுகிறது. ஆனல் காற்று உள்ளடைக்கப் பட்ட ஒரு ரபர் பந்தைச் சுவரில் வீசி எறிகையில் அது சுவரில் பட்டுத் தெறித்துச் சில தூரங்கள் செல்வது அவதானிக்கப்பட்டுள்ளது. இதன் காரணம் என்ன?

கல் சுவரில் மோதும் போது கொண்டு சென்ற விசைக்கு எதிராகச் சுவரும் அதேஅளவு விசையைக் கல்லின்மேல் பிரயோகிக்கும் என்பது விஞ்ஞானக் கொள்கை. [இதனை வெளியிட்ட விஞ்ஞானி நியூட்டன் ஆவார்.] இதனுல் கல்லுக்கும் சுவருக்குமிடையில் விசை சமநிலைப்படுத்தப்படுவதால் கல் ஓய்வுக்கு வந்து விடுகின்றது. பந்தை எறியும்போதும் இதே செயன்முறைதான் நடைபெறும். அதாவது பந்து எடுத்துச் செல்லும் விசைக்குச் சமமான விசையைச் சுவரானது பந்துக்கு வழங்கும். ஆனல் இங்கு சுவர் வழங்கிய இவ்விசையால் இயக்கம் ஓய்வுக்கு வருவதற்குப் பதில் அவ்விசையை பந்தில் உள்ள காற்று நுண்துகள்கள் பெற்றுக் கொள்கின்றன. ஆகவே பந்து விடயத்தில், விசையானது இழக்கப்படுவதில்லை அல்லது மீண்டும் ஊட்டப்படுகிறது. மீண்டும் ஊட்டப்பட்ட விசை பந்தைத் தொடர்ந்து இயக்கும். இதுவே ரபர் பந்து தொடர்ந்து பிரதிபலிப்பதன் தத்துவம்.

★ நாம் முயலை காதிலும் வாத்தைக் கழுத்திலும் பிடித்துத் தூக்கவேண்டும். ஏனெனில் முயலின் காதில் ஏனைய பாகங்களைவிட அதிக வலிமை உண்டு. அத்துடன் அதன் பின்னங் கால்களில் நகங்கள் இருப்பதால் முறையின்றிப் பிடிப்பவரை நகங்களால் தாக்கக்கூடும். எனவே முயலை காதில் பிடித்துத் தூக்குவது எமக்கும் பாதுகாப்பானது; முயலுக்கும் பாதுகாப்பு.

வாத்தின் கழுத்தும் பலம் வாய்ந்தது. ஆனல் ஏனைய பகுதிகள் மிகவும் பலமற்றவை—எளிதில் உடைய வல்லவை.

★ அராபியக் கதைகளில் [எடு. சித்துபாத்தின் கதை] மனிதனைப் பிடித்து உண்ணும்

தாவரங்கள்பற்றிக் குறிப்பிடப் பட்டுள்ளது. இது உண்மை நிலையுடன் எவ்வாறு பொருந்தும் என உங்களுக்குத் தெரியுமா ?

உலகின் பல பாகங்களில் சிறு பூச்சிகளை உண்ணும் இயல்புடைய தாவரங்கள் உண்டு. இவை தாம் பெற முடியாத சில உணவுகளை பெறவே இத்தகைய சிறப்பு முறையைக் கையாளுகின்றன. உதாரணமாக இலங்கையில் காணப்படும் கெண்டித் தாவரத்தைக் கூறலாம். இதன் தாவரவியல் பெயர் (Nepenthes) என்பதாகும். இதன் இலை பூச்சியைச் சிறைப்படுத்தி, சமபாடடையச் செய்து, நைதரச உணவுகளைப் பெறும் வண்ணம் சிறப்பான பொறியமைப்பை உடையது. இத்தகைய ஊனுண்ணும் தாவரங்களே கதைகளில் மிகைப் படுத்தப்பட்டுப் புகுத்தப் பட்டுள்ளது.

★ பேய்பிடித்தவர் எனக் கருதப்படும் நபர் பேய்விரட்டும் சடங்கின்போது சாட்டையால் அடிக்கப்படுகையில் அவர் அதற்கு உணர்ச்சி வெளிப்பாடுகளைக் காட்டுவதில்லை. அதாவது சாட்டை அடி அவருக்கு வலியை ஏற்படுத்துவதில்லை. இதற்கான காரணம் என்ன ?

ஏனெனில் பேய் விரட்டும் நிகழ்ச்சியின் முன்பு பூசாரி / பேய் விரட்டுபவர் பூமத்தை / ஊமத்தை (Datura) எனும் பூவுடன் வேறு பொருட்களையும் சேர்த்து பேய்பிடித்தவர் எனக் கருதப்படுபவருக்கு உண்ணக் கொடுப்பார். (Datura) என்ற அப்பூவில் கோலின் எசுத்தரேசு எனும் வஸ்து உண்டு. இது உடலை அடைந்து செயலாற்றுகிறது.

நிற்க, மனிதவுடலில் உணர்ச்சிகள் அனுப்பப்பட நரம்பு இழையத்தால் சுரக்கப்படும் ஹோமோன் அசற்றைல் கோலின் என்பதாம். (Datura) என தாவரவியற் பெயருடைய அப்பூவிலுள்ள கோலின் எசுத்தரேசு, ஹோமோனை அசற்றைல் கோலின் இன் வேலையைத் தடைசெய்யும் இயல்புடையது. இதனல் மனிதனில் உணர்ச்சி கடத்தப்பட முடியாத நிலை தோன்றும். இதனலேயே மேற்கூறிய சந்தர்ப்பத்தில் மனிதன் உணர்ச்சிக்கு / தூண்டலுக்கு தூண்டற்பேறு காட்டுவது இல்லை.

உங்கள் கவனத்திற்கு

# தேசிய தினங்களின் பட்டியல்
# (List of National days)

01 ஆடி கனடா / Canada
01 ,, ருவன்டா குடியரசு தினம் / Rwandese Republic
04 ,, ஐக்கிய அமெரிக்கா / U. S. A. (United State of America)
06 ,, மாலாவி / Malawi
11 ,, மொங்கோலியா / Mongolia
14 ,, பிரான்ஸ் / France
14 ,, ஈராக் / Iraq
18 ,, ஸ்பெயின் / Spain
22 ,, போலந்து / Poland
23 ,, ஐக்கிய அரபுக் குடியரசுதினம் / Arab Republic of Egypt
23 ,, எத்தியோப்பியா குடியரசுதினம் / Ethiopia
26 ,, லைபீரியா / Liberia
26 ,, மாலைதீவு குடியரசுதினம் / Republic of Maldives
28 ,, பெரு / Peru

01 ஆவணி ஸ்விட்சர்லாந்து / Switzerland
01 ,, டாஹோமி குடியரசுதினம் / Republic of Dahomy
06 ,, பொலீவியா / Bolivia
07 ,, ஐவர்கோஸ்ட் குடியரசு தினம் / Republic of the Ivory Cost
13 ,, மத்திய ஆபிரிக்க குடியரசுதினம்/Republic of Central Africa
14 ,, பாகிஸ்தான் / Pakistan
15 ,, மக்கள் கொங்கோ குடியரசு தினம் / Congo (Peoples Republic of the Brazaville
17 ,, குவோன் குடியரசு தினம் / Republic of Guan
17 ,, இந்தோனேஷியா / Indonesia
23 ,, ரோமானியா / Romania
31 ,, மலேஷியா / Malaysia

ஆர். எஸ். செல்வரட்ணம், அல்வாய்

# நாவல் தந்த நாயகர்

இவ்வாண்டைத் தமிழ் நாவல் நூற்றாண்டாகத் தமிழ் இலக்கிய உலகம் கொண்டாடுகின்றது.

## முதல் நாவல்

'புதினம்' என்று தமிழிலே அழைக்கப்படும் நாவலுக்கு 1979ஆம் ஆண்டு ஆவணித்திங்கள் 22ஆம் நாளுடன் நூறு ஆண்டுகள் நிறைந்தன.

1879-ம் ஆண்டு ஆவணித் திங்கள் 23-ம் நாள் முதல் தமிழ் நாவலான 'பிரதாப முதலியார் சரித்திரம்' வெளிவந்தது. இதை எழுதியவர் நீதிபதி வேதநாயகம் பிள்ளை அவர்கள். தமிழ் இலக்கிய உலகிற்கு 'நாவல்' என்னும் புதிய அணியொன்றினை அணிவித்து அழகூட்டிய பெருமை அன்னாருக்கே உரியது. அதற்கு முன் தமிழில் உரைநடையில் நெடுங்கதைகள் இருந்ததில்லை. கம்பராமாயணம், சிலப்பதிகாரம் சிந்தாமணி போன்ற நெடுங்கதைகள் இருந்தும், சாதாரண மக்களும் படித்து மகிழக்கூடிய வகையில் இருக்கவில்லை. கற்றவர்கள் படித்துச் சுவைக்கும் கவிதை நடையிலேயே அவைகள் அமைந்திருந்தன.

அந்நிலையில் ஆங்கில இலக்கிய உலகில் செல்வாக்குப் பெற்றிருந்த (Novel) என்றழைக்கப்படும் உரைநடையில் அமைந்த நெடுங்கதைகளைப் பின்பற்றி, தமிழுலகிலும் அவை வளர வழி சமைத்தவர் வேதநாயகம்பிள்ளை அவர்கள். இன்று கிளைவிரித்துப் பரந்து விரிந்து கிடக்கும் தமிழ் நாவல் விருட்சத்துக்கு அடிகோலியவர் அவரே.

## குறிக்கோள் இலக்கியம்

தமது முதல் நாவலிலேயே ஒரு நெடுங்கதை எப்படி இருக்க வேண்டும், அதன் பண்புகள் என்ன? என்பவற்றுக்கு முன்னோடியாகத் தம் நாவலை அமைத்துள்ளார். இன்று வாணிப நோக்கில் உள்ளீடுகள் அற்றுக் கவர்ச்சியைப் புகுத்தி, உணர்ச்சிகளைத் தூண்டி உண்மையினின்று முரணபட்டுத் துணைக்கு அரைகுறை ஆடைப் படங்களை வரைந்து வியாபாரம்பண்ணும் தமிழிலக்கியச் சந்தையில் வேதநாயகம் பிள்ளை அவர்களின் முதல் நாவல் எம்மைச் சிந்திக்க

வைக்கிறது. சிந்தனையின் வழியில் அது உயர்ந்து நிற்கிறது.

புதினங்களைப் படைப்பவர்கள் உள்ளதை உள்ளவாறு சொல்ல வேண்டும் என்பார் சிலர். ஆனால் வேதநாயகம் பிள்ளை அவர்கள் 'மனிதன்' எப்படி இருக்கிறான் என்பதை அல்ல, எப்படி இருக்க வேண்டும் என்பதையே தமது நாவலின் குறிக்கோளாகக் கொண்டிருந்தார். தமது பாத்திரங்களையும் அவ்வாறே உலாவ விட்டிருந்தார்.

சிலப்பதிகாரம் தந்த இளங்கோவடிகள் அந்நூல் எழுந்த காரணத்தைக்கூற முயல்கையில்:

அரசியல் பிழைத்தோர்க்கு
அறங் கூற்றாவதும்
உரைகால் பத்தினிக் குயர்ந்
தோர் ஏத்தலும்
ஊழ்வினை உருத்துவந்தூட்டும்
என்பதும்
சூழ்வினை சிலம்பு காரணமாக
சிலப்பதிகாரம் என்னும்
பெயரால்

நாட்டுவதும் யாமோர் பாட்டுடைச் செய்யுளென எழுதியுள்ளார். அவ்வாறே வேதநாயகரும் தாம் எழுதிய புதினத்தைக் குறிக்கோள் இலக்கியமாகவே படைத்தார்.

## நாவல் நகைச்சுவை

இன்று நாவலுலகில் பல உத்திகள் பல ரசங்கள் கையாளப்படுகின்றன. பொதுவாக பெரும்பாலும் ஆசிரியர் கூற்றாகவே நாவலை எழுதுவதுதான் வழக்கமாக உள்ளது. விலக்குகளும் இல்லாமல் இல்லை.

ஆனால் வேதநாயகம்பிள்ளை அவர்கள் முதல் நாவலிலேயே கதாநாயகன் கூற்றாகக் கதையை வளர்த்துப் புதுமைபுரிந்தார்,

இன்று தமிழ் நாவல்களில் பல ரசங்கள் வந்தும் நகைச்சுவை நாவல்கள் மிக அருகியே காணப்படுகின்றன. காரணம் நகைச்சுவை நாவல் எழுதுவது சுலபமல்ல. சிரமமான அந்த வேலையை வேதநாயகர் தமது முதல் நாவலிலேயே கதாநாயகனை பிரதாப முதலியாரை வைத்து நம்மை வேண்டியமட்டும் சிரிக்க வைக்கிறார். அத்தோடு சிந்திக்கவும் வைக்கிறார்.

> **சிரித்திரன் கூறுகிறார்**
>
> எனது பத்திரிகை ஆசாரமான சஞ்சிகை என்பதில் எனக்கு நம்பிக்கை உண்டு. ஏனெனில், கத்தோலிக்க குருமார், கன்னியர்கள் பலர் இதை விரும்பிப் படிக்கின்றனர். பலர் சந்தாதரராகவும் இருக்கின்றனர்.

நகைச்சுவைக்கு ஒரு காட்சியை இங்கு கூறுகிறேன். நானும் சில பிள்ளைகளும் தெருவில் விளை

யாடிக்கொண்டிருந்த பொழுது, அவர்களில் ஒரு பையன் என்னைப் பார்த்து 'நான் இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு ஒரு வித்தை செய்கிறேன். நீ அந்த வித்தையை இரண்டு கண்களையும் திறந்து கொண்டு செய்வாயா? என்று கேட்டான். அதற்கு நான் 'நீ இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு செய்கிற வித்தையை நான் கண்களைத் திறந்து கொண்டு செய்யக் கூடாதா? அப்படி நான் செய்யா விட்டால் உனக்கு இவ்வளவு பந்தயம் கொடுப்பேன் என்று ஒப்புக்கொண்டேன். உடனே அந்தப் பையன் நடுத் தெருவில் உட்கார்ந்து, இரண்டு கண்களையும் மூடிக்கொண்டு, மண்ணை அள்ளி அள்ளித் தன் கண்மேல்போட்டுக்கொண்டான். பிற்பாடு அவன் என்னைப் பார்த்து, 'நீ இரண்டு கண்களையும் திறந்துகொண்டு இந்த வித்தையைச் செய்' என்று மண்ணை அள்ளி என் கையில் கொடுத்தான். நான் கண்ணை இழந்து போவதைப் பார்க்கிலும் காசை இழப்பது நலமென்று நினைத்து பந்தயக் காசை அவனுக்குக் கொடுத்துவிட்டேன்.

நகைச்சுவைக்கு இன்னுமோர் காட்சி.

''ஒருநாள் ஒரு பையனிடத்தில் நான் இரண்டு வாரகன் கடன் வாங்கினதாகவும், அவன் என்னை அடித்ததாகவும், சொப்பனங்கண்டு விழித்துக்கொண்டு, அந்தப்பையனை மறுநாள் பார்த்த போது, அந்தச் சொப்பனத்தை அவனுக்குத் தெரிவித்தேன். உடனே அவன் 'அந்தக் கடனைக் கொடு' என்று என் மடியைப் பிடித்துக்கொண்டான். நான் அவனுடைய கன்னத்தில் பளீர், பளீர் என்று இரண்டு மூன்று அறைகள் கொடுத்தேன். அவன் 'ஏன் அடிக்கிறாய்?' என்று கேட்டான். 'இராத்திரி நீ என்னைச் சொப்பனத்தில் அடித்தபடியால் அதற்காக இப்போது நான் உன்னை அடித்தேன்' என்றேன். அவன் 'கடனுக்கும் அடிககும் சரியாய்ப் போய்விட்டது' என்று சொல்லிப் போய்விட்டான்.

இவ்வாறு நகைச்சுவைகளை தம் நாவலில் ஆங்காங்கு வாரி இறைத்துச் சுவை குன்றாமல் ஆக்கி உள்ளார்.

கருத்துச் செறிவும் — நகைச்சுவையும் மிக்க நாவலைப் படைத்ததன் மூலம் தமிழ் நாவல் உலகின் தந்தையானார் வேதநாயகம் பிள்ளை அவர்கள்.

இன்று கதை சொல்லும் பாங்கில் உத்திகளில், கருத்துக்களில் தமிழ் நாவல்கள் எவ்வளவோ மாற்றங்களை அடைந்து வந்திருந்தாலும் அவற்றுக்கு முதன் முதலில் அடியெடுத்துக் கொடுத்த பிரதாபமுதலியார்சரித்திரத்தை

அதை எழுதிய வேதநாயகம் அவர்களை நாம் நன்றியோடு நினைக்கின்றோம்.

### நாயகர் வரலாறு

தமிழ் நாட்டிலே குளத்தூர் என்னும் ஊரிலே புதுமையால் புகழ்பெற்ற கத்தோலிக்க குடும்பம் ஒன்றில் 1826-ம் ஆண்டு அக்டோபர்த் திங்கள் 11-ம் நாள் வேதநாயகம் பிறந்தார்.

ஆங்கிலத்திலும் தமிழிலும் புலமை பெற்ற இவர் கடுமையான உழைப்பினால் உயர்ந்தவர். கவிபாடும் ஆற்றல் மிக்கவர். நீதிபதியாகப் பதவி வகித்தவர். இசையறிவு மிக்கவர். பல அறிஞர்களாலும் புலவர்களாலும் பாராட்டப்பட்டவர். நீதி நேர்மையோடு வாழ்ந்தவர். உரிமைக்காகக் குரல்கொடுத்த தேச பக்தர்.

இத்தகைய பல சிறப்பியல்புகளைப் பெற்றிருந்த இவர் அடுப்பூதவே பெண்கள் என்றிருந்த நிலைகண்டு நொந்து 'பெண்மதி மாலை' என்னும் நூலை இயற்றினார்.

### இசை நாயகர்

சமயவேற்றுமைகளையும் 'சர்வ சமயசமரசக் கீர்த்தனைகள்' என்னும் நூலை இயற்றியதோடு, தாம் சார்ந்த கிறிஸ்தவ சமயத்தின் பாலுள்ள பற்றால் சத்தியவேதக் கீர்த்தனைகளும் பாடினார்.

தமிழிசையின் வளர்ச்சிக்கு வேதநாயகம்பிள்ளை அவர்கள் ஆற்றிய தொண்டு குறிப்பிடத்தக்கது.

பழம் பெருமைமிக்க தமிழிசையில் கால ஓட்டத்தில் தமிழ்ப் பாடல்கள் அருகி வடமொழியும் தெலுங்கும் ஆட்சிசெய்ய ஆரம்பித்தன. தமிழ் இசை கர்நாடக இசையாக மாறியது.

முத்துசுவாமி தீட்சிதர்-தியாகராச சுவாமிகள், சியாமா சாஸ்திரிகள் போன்றோர் தமிழிசையை வளம்படுத்தியும் உருப்படிகளைப் பெரும்பாலும் தெலுங்கிலேயே ஆக்கிவைத்தனர். தமிழ், இசைக்கு ஏற்ற மொழியல்ல என்ற தப்பான கருத்தும் வளர்ந்தது.

மாணிக்கவாசகனின் திருவாசகத்தையும், திருஞானசம்பந்தனின் தேவாரத்தையும், அருணகிரியாரின் திருப்புகழையும் கொஞ்சுதமிழ்ப் பாடிய அதே வாய்கள் தமிழ், இசைக்கு ஏற்ற மொழியல்ல என்று கூசாமல் பொய்யுரைத்தன.

> அன்போடு உன் கடமையைச் செய் அப்பொழுது உன் கடமை உனக்கு மிகவும் இலகுவாக இருக்கும்.
>
> —தர்ம சக்கரம்

இதனுல் ஒருகாலத்தில் தமிழ் நாட்டில் பெரும் பரபரப்பே ஏற்பட்டது. தமிழ் இசைமன்றங்கள் தோன்றின. அண்ணுமலைச் செட்டியார். கல்கி கிருஷ்ண மூர்த்தி போன்ரூர் இவற்றுக்கு முன்னின்று உழைத்தனர். இந்த வகையில் வேதநாயகம் பிள்ளை அவர்களும் தமிழில் இசை நயத்தோடு கருத்துச் செறிவோடு பாடலாம் என்று நடைமுறையில் செய்து காட்டிஞர், அவற்றைத் தமிழ் இசை உலகம் நன்றியோடு நினைத்துப் பார்க்கவேண்டும்.

தமிழ்மொழிக்கும் -தமிழிசைக்கும், சமயத்துக்கும்-நாட்டுக்கும் அளப்பரும் சேவையாற்றிய வேத நாயகர் 1889-ம் ஆண்டு ஆடித் திங்கள் 21-ம் நாள் அமரராஞர்.

தமிழ் மொழிக்கு முதன் முதலில் அகராதி கண்ட வீரமாமுனிவர்போல், தமிழ் மொழிக்கு முதன்முதல் நாவல் தந்தார் நீதிபதி வேதநாயகம் பிள்ளை. இவர்களால் தமிழ்த்தாய் அழகு பெறுகிருள், கிறித்தவம்பெருமை அடைகிறது.

வாழ்க வேதநாயகர் தமிழ்த் தொண்டு.

— மலர் வேந்தன்

# எமது அடுத்த இதழ்

※ இளைஞர் சிறப்பு மலராக மலரும் ※

இதற்கு வேண்டிய ஆக்கங்களை அனுப்புபவர்கள் 20-9-80-க்குப் பிந்தாமல் அனுப்பி வைக்கவும்.

— ஆர்.

# இன்னொரு முயற்சி

கள்ளியில் பூக்கள் கண்களை ஈர்க்கும் ;
கண்படும் முட்கள் கருத்தினைத் தடுக்கும் !
அள்ளிநீர் எற்றும் ஆழ்கடல் துளிகள் !
அடியினில் அழைக்கும் அழகிய மணிகள் !

வண்டமர் தாமரை மலர்முகம் காட்டி ;
வாஎன அழைத்தால், வழியினிற் சேறு !
கண்டவன் கூட்டினில் நினைப்பது தேன்
கைதொடக் கடுமையைக் கொடுக்கும் தேனீ !

கார்முகில் பொங்கிக் குளங்களும் பாயும் !
குறுநகை காட்டும் இளந்தளிர் சாயும் !
நீர்க்குளம் வற்றி நிலமெலாம் வெடிக்கும்
நெஞ்சமும் மண்ணும் வரட்சியில் துடிக்கும் !

ஆசைகள் நெஞ்சில் அடுக்குவாள் அன்னை;
ஆயினும் குழந்தை இறந்தே பிறக்கும் !
பாசமே பாரமாய்ப் பெற்றவள் வெறுக்கப்
பத்தொடு ஒன்ருய்ப் புதியது பிறக்கும் !

இதுஒரு மரணம் எனவரும் மாலை ;
இன்னொரு உதயம் உண்டெனும் காலை ;
இதுவரை பாதையில் எத்தனை தோல்வி !
இன்னொரு முயற்சியில் காணலாம் வெற்றி !

— சிவசக்தி

# சிரித்திரச் சிற்பி சிவஞான சுந்தரர்



★ செவ்வி—நாவண்ணன்

பதினெட்டு ஆண்டுகள் தொடர்ந்து தனி நபராகநின்று நகைச் சுவைக்கென்றே பத்திரிகை நடாத்தி சாதனை நிலைநாட்டி வருபவர் சிரித்திரன் ஆசிரியர் திரு. சிவஞான சுந்தரம் அவர்கள். கரவெட்டி யைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர் சம்பத்திரிசியார் கல்லூரியின் பழைய மாணவராவர். பம்பாயில் உள்ள சேர் ஜே. ஜே. கலைக் கல்லூரியில் (Sir. J. J. School of Arts) கட்டடக் கலைத் துறைப் பயிற்சி பெற்றவர். சிறந்த எழுத்தாளரும் ஓவியருமாவர். பயிற்சி முடிந்து வந்த அவர், அரசாங்க பொது வேலைப் பகுதியில் கடமை யாற்றினர். அதேவேளையில் தினகரன் — வீரகேசரி நாளேடுகளில் 'சுந்தர்' என்றபெயரில் 'சவாரித்தம்பர்' கார்ட்டூன் மூலம் ஈழத்து வாசகர்களிடையே தனக்கென்று தனியிடத்தைப் பிடித்துக் கொண் டார். தற்பொழுது வீரகேசரியில் 'ஸ்ரீமான் செல்லக்கிளி' பகுதியை தினமும் படைத்துக் கொடுப்பவரும் இவரே.

**நல்ல எதிர்காலமுள்ள அரசாங்க வேலையை விட்டு ஏன் விலகினீர்கள் ?**

இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. அத்தொழிலிலே எனக்கு ஆத்ம திருப்தியில்லை. அத்தோடு சிங்களம் மட்டும் சட்டமும் வந்தது, அதை ஒரு காரண மாகக் கூறி வேலையை விட்டு விலகிவிட்டேன். சிங்களம் மட்டும் சட்டம் வந்திராவிட்டால் கூட வேறு காரணத்தைக் காட்டி யென்ருலும் வெளியேறியிருப் பேன்.

**தொழிலை விட்டு விலகியதும் பத்திரிகை ஆரம்பிக்க வேண்டும் என்ற எண்ணம் எப்படித் தங்களுக்குத் தோன்றியது ?**

1947ஆம், 48ஆம் ஆண்டுகளில் பம்பாயில் பயின்றுகொண்டிருந்தபோது "Blitz", "Conch" ஆங்கிலப் பத்திரிகைகளும் ''லோக் சத்த'' என்ற மராட்டியப் பத்திரிகைக்கும் நகைச்சுவைக் கார்ட்டூன்கள் எழுதிய அனுபவம் இருந்தது. அத்தோடு இலங்கையில் வீரகேசரி, தினகரனில் வந்த ''சவாரித்தம்பர்'' மூலம் ஒரளவு அறிமுகமாயிருந்தேன். அந்த அறிமுகத்தை முதலாகவைத்துபத்திரிகை தொடங்கினால் என்ன என்ற எண்ணம் உண்டாகியது; தொடங்கிவிட்டேன்.

**தங்கள் சஞ்சிகைக்கு ஏன் 'சிரித்திரன்' என்று பெயரிட்டீர்கள் ?**

'சரித்திரம்' என்ற சொல்லை சிதைத்து 'சிரித்திரம்' ஆக்கி, 'சிரித்திரத்தை' 'சிரித்திரன்' என்று ஆக்கிவிட்டேன். சிரித்தபடி இரு என்று சொல்வதற்கு பேச்சு வழக்கில் 'சிரித்திரன்' என்றும் சொல்வது உண்டல்லவா? அதுவும் ஒரு காரணம். ஆனல் நான் இந்தப்பெயரைத் தெரிவு செய்தபோது ஏகப்பட்ட கருத்து வேறுபாடுகள், எதிர்ப்புகள் தோன்றத்தான் செய்தன. ஆனல் இன்று இப்பெயர் தனித்துவம் அடைந்துவிட்டதில் எனக்கு பெரு மகிழ்ச்சி.

**சிரிப்புக்கு மட்டும் முக்கியத்துவம் கொடுத்து சஞ்சிகை நடத்த தாங்கள் துணிந்ததின் காரணம்?**

இலங்கை வாசகர்களாகிய நாம் எல்லோரும் இந்தியச் சஞ்சிகைகளைப் பார்த்து இவர்களது 'பிராமண'ச் சிரிப்புகளைப் படித்து இரவல் சிரிப்பு சிரித்துவந்தோம். ஆங்கிலம் கற்றவர்கள் இலண்டனில் இருந்து வெளிவரும் 'பஞ்' (Punch) போன்ற பத்திரிகைகளைப் பார்த்து ஆங்கிலச் சிரிப்பு சிரித்தார்கள். ஆனல் மண்வாசனையோடு கூடிய நமது தமிழிலும் தரமான நகைச்சுவைகளைப் படைக்கலாம் என்று 'சவாரித் தம்பர்' தைரியமூட்டினர். அதன்படி செயற்பட்டேன், பலன் எமது தமிழில் உள்ள நகைச் சுவையை, இறக்குமதி பத்திரிகைகளில் உள்ள சிரிப்புகளைவிட விரும்பிப் படிக்கும் அளவுக்கு வாசகர்கள் உருவாகியுள்ளனர், இப்படி ஒரு நிலையை உருவாக்க வேண்டியே இத்துறையைத் தேர்ந்தெடுத்தேன்.

**ஈழத்தில் தமிழ் நாவல் இலக்கியத்தைப் பொறுத்தவரையில் இன்னும் எதிர்பார்த்த அளவு முன்னேற்றம் கிட்டாமைக்கு என்ன காரணம் ?**

தரமான நாவல்கள் சில இங்கேயும் படைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை தொடர்ந்தும் வளர்வதற்கு நம் நாட்டுச் சூழ்நிலைகள் இடம் கொடுக்காமையே காரணம். மாதப் பத்திரிகைகளில் தொடர் நாவல்கள் வெளியிட்டு வளரமுடியாது. செய்தித் தினசரிகளால் தொடர் கதைக்கு முக்கியத்துவம் கொடுக்கமுடியாது. வாரப் பத்திரிகை வெளியிட்டாலோ பொருளாதார நெருக்கடி. இவை ஒருபுறமிருக்க இந்திய வாரப் பத்திரிகையைப் போட்டிபோட்டு காசு கொடுத்து வாங்கிப் படிக்கும் அளவுக்கு ஈழத்து வாசகர்கள் நமது பத்திரிகைகளுக்கு ஆதரவு வழங்க முன்வரமாட்டார்கள். இறக்குமதிப் பத்திரிகைகளில் உள்ள கவர்ச்சிகள், அச்சுத்திறமைகள் எமது பத்திரிகைகளின் இல்லாமையே இதற்குக் காரணம். இன்னுமொரு முக்கிய காரணத்தைக் கூறுவதானல் தமிழ்த் தேசிய இனத்துக்கு கருவிலே உருவான வியாதியான 'ஓசி'ப் பத்திரிகை படிக்கும் வழக்கத்தையும் கூறலாம்.

தரமான இலக்கியத்தை எப்படிக் கணிக்கிறீர்கள் ?

தந்தக் கோபுரத்தில் இருந்து கொண்டு கற்பனை உலகைக் கட்டி எழுதும் தத்துப்பித்து எழுத்துக்களைத் தவிர்த்து விடுகிறேன். ஏனெனில் அவை பொதுமக்களுக்குப் பயன்படாதவை. விண்ணைப் பார்த்து எழுதாமல், மண்ணைப்பார்த்து எழுதப்படும் இலக்கியங்களையே தரமானவை என நான் கணிக்கிறேன்.

மலையக எழுத்தாளர்கள் பற்றி தங்கள் கருத்து ?

பிரச்சினைகளின் அழுக்கத்தில் இருந்துகொண்டு இலக்கியம் படைக்கிறார்கள், அதனல் அவர்கள் எழுத்துக்களில் உயிர்த் துடிப்பு உண்டு.

அன்பின் ஆற்றலை அளவிட முடியாது. அது அற்ப கூழை அமுதமாக்கும். சிறு குடிலைப் பெரு மாளிகையாக்கும். இன்னலைப் போக்கி, இடர்களைக் களைவது அன்பே.

—எவ். பேக்கன்

இன்றைய உலகில் பத்திரிகைகளுக்கு ''செக்ஸ்'' தேவைதானு ?

இதை நான் முற்றிலும் எதிர்க்கின்றேன். என்னுடைய படைப்புகளான சவாரித்தம்பரும், சின்னக்குட்டியும் எதுவித கவர்ச்சியுமில்லாத கிழட்டுப் பாத்திரங்கள். அவர்கள் இருவரும் எல்லாக் கவர்ச்சிகளையும்விட தமிழ்

மக்களை அதிகமாகக் கவர்ந்தார்கள். அந்நாளில் பத்திரிகையை வாங்கியதும் முதலில் சவாரித்தம்பரைப் பார்ப்பவர்களே அதிகம் இருந்தார்கள். எனவே, நல்ல கருத்துக்களைச் சுவைபடக்கொடுக்கும் திறமை படைப்பவர்களிடம் வேண்டுமே ஒழிய, கையாலாகாத தன்மையில் கவர்ச்சியையும், ஆபாசங்களையும் படைத்து பத்திரிகை 'விபசாரம்' செய்யக்கூடாது.

**தங்கள் பத்திரிகையைத் தொடர்ந்து 18 வருடங்கள் ஒரே தரத்தில் நடாத்திவரும் வெற்றியின் இரகசியம் என்ன என்று கூறுவீர்களா?**

காலத்தை சுவையாக பிரதிபலிக்கும் தன்மை, எதுவித துவேஷமும் இல்லாமல் உள்ளதைப் பண்பான விதத்தில் காட்டப்பட வேண்டிய இடத்தில் சுட்டிக் காட்டுகிறேன். அடுத்து எவருக்கும் அஞ்சி முகஸ்துதி எனும் 'நரஸ்துதி' பாடுவது இல்லை. இவற்றோடுகூட 'எனது சகதர்மினி'யின் மனோதர்மத்திலேயே (மனைவியைக் காட்டிச் சிரிக்கின்றார்) அவருடைய முழு ஒத்துழைப்பும் எனக்குக் கிடைக்கிறது. பத்திரிகைக்கு வேண்டிய விடயங்களைத் தெரிதல், ஒப்பு நோக்குதல், பக்கம் அமைத்தல், கட்டுதல், அனுப்புதல் அனைத்தும் அவரது முயற்சியே. அத்தோடு எனது குடும்ப நண்பரான நண்பர் ராதையனுக்கும் இதில் முக்கிய பங்கு உண்டு. சஞ்சிகைக்கு நான் 'அதிபதி' என்றாலும் நண்பர் ராதையனின் உழைப்பு 'பாதி' எனும் அளவுக்கு அவரது ஒத்துழைப்புக் கிடைக்கிறது. இவைதான் என் வெற்றிக்குக் காரணங்கள்.

**இலங்கை வானொலி நாடகத் தமிழ் பற்றி தங்கள் கருத்து என்ன?**

எனது சஞ்சிகையில் மகுடியார் பதிலில் ஒருமுறை கூறியதைக் கூறுகின்றேன். சிறந்த ஒரு நகைச் சுவை நாடகம் கேட்க வேண்டுமானால் எமது வானொலியில் யாழ்ப்பாணத் தமிழில் நடைபெறும் சோக நாடகமொன்றைக் கேட்டால்போதும். இதுதான் வானொலி நாடகத் தமிழ் பற்றி எனது கருத்து.

**இன்றைய மேடை நாடகங்கள் பற்றி நீங்கள் கூற விரும்புவது?**

சில இடங்களில் திருப்தி கரமான முன்னேற்றம் காணப்படுகின்றது. ஆனால் நகைச் சுவை எனும் பெயரில் பெண்களை கீழ்த்தரமான முறையில் கிண்டல் செய்வது எல்லாம் மேடைக்கு மேடை இடம்பெறும் போது இதன் வளர்ச்சி தடைபட்டுப்போகின்றது. சில நாடகங்களை பண்பான குடும்பங்கள் பார்க்க முடியாத அளவு நடிக்கிறார்கள். இவை ஒழிக்கப்படல் வேண்டும்.

# புறப்படு தமிழா!....

புது உலகமொன் றமைந்திட
புரட்சி வாதிகளே புறப்படுவீர்!
மதுவில் நீந்தி மாளிகையிலுறையும்
மன்மதன்களே கண்ணைத் திறந்திடுவீர்!
எதுவுமின்றி ஏங்கி தவிக்கும்
ஏழைகளே சற்று பொறுத்திடுவீர்!
வதுவையின்றி வீடு காக்கும்
வாசமலர்களே மனதைத் தேற்றிடுவீர்!

பணமென்றால் எமக்கே சொந்தமென்ற
பரம்பரைப் பேச்சை பற்றவைத்திடுவீர்!
குணம்தான் உலகின் பெரும்
குடும்ப விளக்கென்றதனை யுணர்ந்திடுவீர்!
பிணம்பார்த்து பேருவகை கொள்ளும்
பிசாசென்றதை நினைவில் நிறுத்திடுவீர்!
இனத்தின் பற்றாய் யிதனைமாற்றி
இலக்கு வொன்றை யடைந்திடுவீர்!

காலமெனும் இராட்சத மனிதன்
கால்படா தோடிப் போகிறான்
சலாம் போட்டினம் விற்கும்
சாத்தான்கள் விரைவில் சரிவார்கள்
வலம் வாழ்க்கையில் ஒருநாள்
வசந்த மலர்கள் உமக்கே மலரும்
சலனமின்றி அதை யெண்ணி
சாகா தென்றும் காத்திடுவீர்!

— வன்னியூர்
அ. அன்ரனி மனோகரன்
(பேராதனை பல்கலைக்கழகம்)

# அவள் ஏன் கலங்குகிருள் ?

★ வீ. எம். குகராஜாவின் ''அவள் ஏன் கலங்குகிருள்'' நாடகம் நாடக அரங்கக் கல்லூரியினரால் தயாரிக்கப்பட்டு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் 2-8-80 அன்று அரங்கேற்றப்பட்டது. அந்நாடக விமர்சனத்தை இங்கேதருகிறோம். ★

● நாவண்ணன்

மங்கலமாகவே நாடகங்கள் ஆரம்பிக்க வேண்டும் என்ற மரபுகளைக் கடந்து அமங்கல ஓசையாம் 'பறை' முழக்கத்துடன் நடந்த திரை நீக்கம் நாடக உலகில் ஒரு புரட்சிதான். புதுமை விரும்பிகள் சபாஷ் போடலாம்.

மனைவி இறந்ததும் பிள்ளைகளுக்காகக் கணவன் மறுமணம் செய்து கொள்ளலாம் போதனைகள் சின்னஞ்சிறிசிலேயே பிள்ளைகள் ஏற்கும் சுமைகள், குடும்பச் சுமை தாங்கவியலாது பிள்ளைகளைத் தத்துக் கொடுக்கும் சம்பவங்கள், வாழ்விலே எதிர் நீச்சல் போடமுடியாது மரணத்தை நாடும் கோழைகள், கஸ்டத்தில் கைகொடுக்காமல் கெளரவப் பிரச்சனையை எழுப்பும் ஜென்மங்கள், துன்பத்தைக் கண்டு தூரவிலகும் துட்டர்கள், சீதனப் புற்றுக்குள் வாழும் பாம்புகள் இவற்றின் மத்தியில் இன்னலுறும் ஏழைப் பெண்ணினம் எல்லாம் கதையிலே வருகின்றன.

பிரச்சனைக்கெல்லாம் தீர்வு 'குடும்பக்கட்டுப்பாடு' என்று வானொலிக்காக எழுதிவிட்டு மேடைக்கென்று தணிக்கை செய்ததின் பயன் கதையின் கரு சிதைந்து, பெரிய சட்டையை வெட்டிக் குறைத்து பொருத்தமில்லாது தைத்ததுபோல் இருந்தது.

நடிப்பைப் பொறுத்தவரையில் குணம், முத்தையா பாத்திரங்களில் முன்னேற்றம்வேண்டும். தம்பையா பாத்திரத்தின் நடிப்பு சில இடங்களில் கட்டுப்படுத்தப் பட்டிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். கண்மணிகளாக நடித்த செல்வி குமுதினி சண்முகலிங்கம், செல்வி இ. ஆனந்தராணி இருவரும் நாடக உலகிற்கு புதிய கண்மணிகளே. இவர்கள் தொண்டு தொடர்ந்தும் நாடக உலகிற்குத் தேவை.

பிள்ளையைத் தத்துக்கொடுத்து எழுதியஒப்பந்தசீட்டைக் கணேசு கொண்டு செல்லாது போதல்,

13 வருஷங்களின் முன் முதல் இருந்த வீட்டுவேலியில் குமாரசாமியால் கொழுவப்பட்ட அதே கயிற்றை 13 வருடங்களின்பின் தம்பையா இருந்த குடியேற்ற திட்ட வீட்டுவேலியில் இருந்து கழற்றி தூக்குப் போடுதல் போன்ற சில்லறைத் தவறுகளைத் தவிர்த்திருக்கலாம்.

வசனங்கள் கூடப்பரவாயில்லை. சில இடங்களில் வசனமேயில்லாத 'பாவங்கள்'. நிலைகள் நெறியாளர் கே. எம். சண்முகலிங்கத்தின் திறமைக்குச் சான்றுகள்.

**சிரித்திரன் கூறுகிறார்**

என்னுடைய நண்பருடைய உறவினர் ஒருவர் சிறந்த 'கிரிக்கட்' விளையாட்டு வீரர். ஒரு விபத்தில் அந்த வீரர் தன் ஒரு காலை இழந்துவிட்டார். வைத்திய சாலையில் இருந்த அவரிடம் என் நண்பர் "இதுவரை சுறுசுறுப்பாக நடமாடிய உமக்கு இப்படி இருப்பது மிகவும் சிரமமாக இருக்குமே ஏதாவது வேண்டுமென்றால் கேளும்" என்றார். அதற்கு பழைய சிரித்திரன் பிரதிகளையெல்லாம் கொண்டுவந்து தாருங்கள் அதுவே போதும் என்றார். அடுத்தவர் மனச் சாந்திக்கு எனது சஞ்சிகை உதவுகின்றது என்பதில் எனக்குப் பெரிய சாந்தி.



கால இடமாற்றங்களுக்கேற்ப மேடை அமைப்பில்—பாத்திரங்களின் உடைகளில் ஏனோ மாற்றங்களைக் கொண்டு வரவில்லை.

நாடகத்தின் முடிவிலே "உலகில் மனச் சாட்சி உள்ள ஆண் ஜென்மமே இல்லையா ? என்று எண்ணத் தோன்றுகிறது.

மேடையில் இருக்கும் ஒவ்வொரு பொருளும், அமைப்பும், அடையாளங்களும் எதையோ சொல்லவேண்டும். இந்த அடையாளம் ஏன் போடப்பட்டது என்பதற்கு விளக்கம் விமர்சன அரங்கில் கேட்டுத் தெரியவேண்டிய அளவுக்கு அமையக்கூடாது.

'எல்லாப் பாணியையும் கலந்து—எதையுமே குறிப்பிட்டுச் சொல்ல முடியாத 'தனிப்பாணி' தான் நாடக அரங்கக் கல்லூரியின் நாடகங்கள். இன்னும் தெளிவாகச் சொல்லுவதானால் 'நாம் போடுவதுதான் நாடகங்கள். இரசிகர்கள் எந்த அர்த்தத்தில் வேண்டுமானாலும் புரிந்துகொள்ளட்டும்' என்ற ஒருவித 'கனம்'. இது குறைக்கப்பட்டால் ஒழிய ஈழத் தமிழ் நாடகங்களுக்கு மீட்பு இல்லை. இக்'கனம்' மலிவான நாடகக் குழுக்களுக்கு இருப்பதால் ஆச்சரியப்படுவதற்கில்லை.

மொத்தத்தில் நாடகம் சுவையான சாம்பாறுதான். ஆனால் அதில் ஏகப்பட்ட பொருட்களைப்

போட்டு 'என்ன என்ன போட்டார்கள் என்று கண்டுபிடிக்க முடியாத குழப்பம் நாடகங்களைப் பார்த்து ஏற்பட வேண்டியது குழப்பங்கள் அல்ல 'தெளிவு'. பலவிடயத்தை மேடையிலே சொன்னோம் என்ற பெருமையை விட ஏதோ ஒரு செய்தியை இரசிகர்கள் மத்தியில் பதிய வைத்தோம் என்ற நிறைவு. அதன் மட்டில் நாடகம் தோல்விதான்.

★ ★ ★

நாடக அரங்கக் கல்லூரியின் துணிகர முயற்சி 'விமர்சன அரங்கு'. தரமான விமர்சனங்களை ஏற்றுக்கொள்வதற்காகவே விமர்சன அரங்குகள். விமர்சனங்களை விமர்சித்து, விமர்சகர்கள் ஒன்றும் விளங்காதவர்கள் என்பதை நிரூபிக்க விவாதத்துறை மேதைகள் கூடும் இடம் அல்ல. விமர்சகர்களின் சந்தேகங்களுக்கு பதில் அளிக்க வேண்டியவர்கள் நெறியாளரும் ஆசிரியருமே. குறிப்பிட்ட இருவரில் ஒருவர் பதில் சொல்ல வேண்டியதில்லை என்பதை மற்றவர் தீர்மானிக்கக்கூடாது. இந்நிலையில் தான் விமர்சன அரங்குகள் நடைபெற வேண்டுமாயின் விமர்சன அரங்கு என்று கூறி நேரத்தை விரயமாக்க வேண்டியதில்லை, பாராட்டு விழாக்கள் நடாத்தலாம்.

---

கொழும்பில் கத்தோலிக்க கன்னியர்மட விடுதிச்சாலை ஒன்றிலே நடந்த உண்மைச் சம்பவம் இது.

அவர்களைப் பொறுத்தவரையில் தமிழ்ப் பத்திரிகைகள் சஞ்சிகைகளைக் கண்ணிலே காண்பிக்கவும் கூடாது. அனைத்தும் ஆங்கிலமயம். ஒருநாள் இரவு பிள்ளைகள் படித்துக் கொண்டிருக்கும்போது தமிழ்ச் சஞ்சிகையொன்றை மாணவி ஒருத்தி படித்துக்கொண்டிருப்பதை மடத்துத் தலைவி கண்டுவிட்டார். கடுமையான கோபத்துடன் அதிபர் அந்தச் சஞ்சிகையைப் பறித்துக்கொண்டு சென்றுர். செய்யக்கூடாத குற்றத்தைச் செய்துவிட்ட நடுக்கத்துடன் மாணவி நின்றுள். சிறிது நேரம் சென்றது. அதிபரிடம் இருந்து மாணவிக்கு அழைப்பு வந்தது. பயந்தபடியே மாணவி சென்றுள். அங்கே மாணவிக்குப் பெரும் வியப்புக் காத்திருந்தது. தலைவி சிரித்தபடியே கேட்டார். ''இந்தச் சிரித்திரன் புத்தகத்தினுடைய பழைய பிரதிகளையும் எனக்கு வாங்கித் தருவீரா பிள்ளை'' என்று. இந்தச் சம்பவத்தை அந்தப் பிள்ளை என்னிடம் கூறி, பழைய பிரதிகளை வாங்கிச் சென்றுர்.

— சிரித்திரன்

# "இழந்துவிட்ட எனது பெலனை எங்கே தேடுவேன்"

**3—9—80 அன்று மாலை யாழ் பேராலயத்தில் தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளின் இறுதிச் சடங்கின்முன் இடம்பெற்ற இரங்கலுரை நிகழ்ச்சியின்போது பேராசிரியர் கு நேசையா அவர்கள் நிகழ்த்திய தலைமையுரை. பேராசிரியர் கு. நேசையா அவர்களும், அடிகளாரும் முப்பது வருடகால குடும்ப நண்பர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.**

தனிநாயகம் அடிகளாரை கடைசி முறையாகச் சந்திப்பதற்கு நாங்கள் இங்குஒன்றுதிரண்டுள்ளோம்.

இலங்கைச் சரித்திரத்தில் செல்வநாயகம் — தனிநாயகம் யுகத்தில் வாழும் சந்தர்ப்பம் எமக்குக் கிடைத்துள்ளது. இது சரித்திரம் பொருந்திய காலகட்டமாகும். ஆண்டவன்தான் ஒவ்வொரு இன மக்களுக்கும் அந்த அந்தக் காலத்திலே தலைவர்களை அனுப்பி வைக்கிறார்.

தந்தை செல்வா முப்பது ஆண்டுகளாகத் தமிழ் மக்களை விடுதலையின் வாசற்படியை நோக்கியழைத்துச்சென்றார். தனிநாயகம் அடிகள் அந்த மக்கள் மனங்களில் கலாச்சார முத்திரையையும், அரசியல் தனிப் பெருமையையும் பதித்துவிட்டார்.

இவ்விருவரும் யாழ்ப்பாணத்தில் அடுத்தடுத்து உள்ள இரு பெரும் கல்லூரிகளான சம்பத்திரிசியார் கல்லூரியும், புனித யோவான் கல்லூரியும்படைத்துக் கொடுத்த பெருமக்களாவர். தனிநாயகம் அடிகள் சம்பத்திரிசியார் கல்லூரி தந்த ஞானி, தந்தை செல்வா புனிதயோவான் கல்லூரி தந்த மேதை.

இதைவிட, எமது தமிழ்க் கொடியை எல்லாக்கண்டங்களுக்கும் எடுத்துச் சென்றவர் தனிநாயகம் அடிகளாவர். அவர் போன இடங்களில் எமதுமொழியைப் பற்றியும், கலாச்சாரத்தைப் பற்றியும் அந்த அந்த நாட்டு மொழிகளிலேயே — அதாவது தனது தாய் மொழியாம் தமிழ் தவிர, இத்தாலியில் இத்தாலிய மொழியிலும், பிரான்சு நாட்டில் பிரஞ்சு மொழியிலும், ஆங்கில நாடுகளில் ஆங்கிலத்திலும் உரை நிகழ்த்திய அறிஞராவர்.

கடந்த சித்திரைத் திங்கள் 27ஆம் 28ஆம் திகதிகளில் வீரசிங்கம் மண்டபத்தில் நடந்த 'செல்வநாயகம் நினைவுச்சொற்பொழிவு'களில் அடிகள் "தமிழர் பண்பாடும் அதன் சிறப்பு இயல்புகளும்" என்ற தலைப்பில் தமிழில் நிகழ்த்திய உரையும், தமிழ்

துறை ஆராய்ச்சியும்- அதன் வரலாறும் வருங்காலமும்'' என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் நிகழ்த்திய சொற்பொழிவும் வலராற்று முக்கியத்துவம் மிக்கவையாகும்.

அன்று அவரது சொற்பொழிவின் முடிவில் நன்றியுரை நவின்ற எதிர்க்கட்சித் தலைவர் அமிர்தலிங்கம் அவர்கள் ''இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் அறிஞர்களில் எவர்தானும் இது போன்ற உரையை நிகழ்த்தியிருக்க முடியாது, இதுபோன்ற ஆய்வு உரையை இன்னுமொருவர் நிகழ்த்துவதானல் இன்னும் பல வருடங்களின் பின்னர்தான் முடியும்'' என்று குறிப்பிட்டிருந்தார்.

செல்வநாயகத்தைப் போல இவரும் தெய்வபக்தி மிக்க மனிதர். பல சந்தர்ப்பங்களில் அவரோடு ஒன்ருகப் பிரயாணம்செய்யும் சந்தர்ப்பம் எனக்குக்கிடைத்துள்ளது. அவ்வேளைகளில்செப நேரம் வந்தவுடன் அவர் செபிக்கத் தொடங்கி விடுவார். அவருக்கு உரமூட்டியது அவருடைய செபவலிமைதான்என்பது எனது நம்பிக்கை.

என்னுடைய நெருங்கிய நண்பனும், பெலனுமாய் விளங்கிய இவர் என்னைவிட்டுப்போய் விட்டார். இழந்துவிட்ட பெலனை நான் எங்கே தேடுவேன்- தமிழ் மக்கள் தாம் இழந்துவிட்ட தமது அடிப்படை ஆதாரத்தை எங்கே கண்டடைவார்கள்.


## புதிய உலகம்

# அறிமுக விழா

''ஊவாமாகாணம் எழுத்தாளர் ஒன்றியம்'' நடாத்தும் புதிய உலகம் அறிமுக விழா 23-9-80-ல் பதுளை உஸ்கொட் நிலையமண்டபத்தில் இடம்பெறும்.

புதிய உலகம் அபிமானிகள், ஆதரவாளர்களை கலந்து சிறப்பிக்கும் வண்ணம் அழைக்கின்றேம்.

நேரம் பி. ப. 2-00 மணி.

விபரங்களுக்கு தொடர்புகொள்ளவேண்டிய முகவரி :

செயலாளர்

ஊவாமாகாண எழுத்தாளர் ஒன்றியம்.

ஊவர் கட்டவளை,

ஹாலி-எல

# கருத்து மோதல்



## “தமிழ் தலைவர்களின் தனிநாட்டுக் கோரிக்கை தளர்வடையவில்லை”

**பொ**துத் தேர்தல் நிகழ்ந்து மூன்று ஆண்டுகள் எட்டிப் பிடித்துவிட்டன. நமது தமிழ்த் தலைவர்கள் இன்னமும் அகிம்சை வழியிலே, அறவழியிலே, அன்பு வழியிலே தமிழுக்காக தமிழ் இனத்துக்காக, தமிழ் மண்ணிற்காக போராடிக்கொண்டுதான் இருக்கின்றார்கள். இன்னமும் போராடத்தான் போகின்றார்கள்

நமது தமிழ் தலைவர்கள் சென்ற 30 ஆண்டுகாலமாக பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகளுக்கும். நிறைவேற்றிய செயல் திட்டங்களுக்கும். நடந்த பொதுத் தேர்தலில் தமிழ் மக்களுக்கு ''தமிழ் ஈழம்'' என்ற தாரகை மந்திரத்தை தந்துவிட்டு பின்னர் பாராளுமன்றத்தில் ஆற்றிவரும் உரைகளுக்கும், செயல்களுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு என்பதை யாரும் மறுக்கமுடியாது, மறைக்க முடியாது, மழுக்க முடியாது.

எமது மக்கள் தலைவர்களில் மட்டும் குறை கூற எண்ணாமல் பொது நோக்கோடு சிந்திக்கத்

பரிசு பெறுபவர் :

செல்வன் இ. ம. மதிஅழகன்
போயிட்டி,
இளவாலை.

தெரிந்தவர்களாய் இருத்தல் வேண்டும். தேர்தல் நடந்து முடிந்தபின் ஆயுத பாணியில் அல்ல அகிம்சைவழியில் போராட எத்தனித்த எம் தமிழ் ஈழத் தலைவர்களை தளரச் செய்ய எடுத்த தந்திரங்கள்தான் எத்தனை? முதலில் ஆகஸ்ட் கலவரம் பலத்த அடியாக விழுந்தது. பின் தங்கள் சகபாடிகளில் ஒருவரான பொத்துவில் கனகரை இழக்க நேர்ந்தது, பின் இன்னுமொரு சிறந்த தலைவனை மாற்றுருக்கு


**பாராட்டுப் பெறுபவர் :**

என். அன்ரன் சேவியர்
மிருசுவில்

எஸ். ரீ. தேவகுமாரன்
மடுறோட்

டி.யூ.செ.யோ. சூரியஜீவன்
யாழ்ப்பாணம்

எஸ். ஈ. ஜே. பெர்ணண்டோ
விளான்

எஸ். எல், பற்றிக்
வங்காலை

ஆர். ஏ. அருள் அழகன்
இளவாலை

ஈழவன்
மடுறோட்


இழக்க நேர்ந்தது. இப்படியாக அவர்கள் பற்பல சோதனைகளைத் தாங்க நேர்ந்தது. அப்படி இருந்தும் அவர்கள் தளர்ந்தார்களா?

எம் தலைவர்கள் வவனியா மாவட்டத்தை சிங்கள அரசாங்க பிரிவுடன் இணைக்கும் தீர்மானத்திற்கு எதிர்ப்பு தெரிவித்து பாராளுமன்றத்தையே விட்டு வெளியேறவில்லையா? எம் தலைவன், எதிர்க்கட்சி முதல்வன் வெளிநாடு செல்ல தமக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை எல்லாம் பயன்படுத்தி பற்பல நாட்டுத் தலைவர்களுக்கு நாம் ஏன் போராட வெளிக்கிட்டோம் என்ற துர்ப்பாக்கிய நிலைபற்றி எடுத்துக் கூறவில்லையா? எம் நாட்டிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு எடுத்துக் கூறவில்லையா? சிங்கள பாராளுமன்ற உறுப்பினர்களிடமும், மக்களிடமும் ஒரு முறையல்ல இரு முறை அல்ல பலமுறை நாம் உங்களிடமிருந்து எதையும் கேட்கவில்லை. நாம் எமது இழந்த தாயகத்தைத்தான் கேட்கிறோம் என்று கூறவில்லையா? இதைவிட வேறு எத்தனை காரியங்களை அவர்கள்சாதித்திருக்கின்றார்கள்! எல்லாவற்றிற்கும் மேலாக தனி நாட்டுக் கோரிக்கை கேட்கும் ஒரே காரணத்திற்காக, ஏற்கக் கூடிய எத்தனையோ பதவிகளையெல்லாம் விடுத்து பல கஸ்டங்களின் மத்தியில் போராடவில்லையா?

அகிம்சை என்ற கோதாவில் நின்றுகொண்டு இதற்குமேல் எதைத்தான் செய்ய வேண்டுமென்று நாம் எதிர்பார்ப்பது?

தனிநாட்டை அவர்கள் தரு வதா அல்லது நாம் பெறுவதா? முடியவில்லை என்ருல் அவர்களை பாராளுமன்றத்தைவிட்டு வெளி யேறச் சொல்வதா ? அதற்கும் தான் அவர்கள் தயாராக நின்று தங்களிலும் அனுபவத்தாலும், விவேகத்தாலும் கூடிய தலைவர் கள் யாராவது நின்று வழி நடத்த விரும்பின் தாராளமாக விட்டுக்கொடுக்கின்ருேம். என்று கூறியிருக்கின்ருர்களே. மேலும் அண்ணன் அமிர் ஒருமுறை ''தாயம் விளையாடுபவன் தான் வைக்கும் ஒவ்வொரு தாயக் கட்டைக்கும் பதில் சொல்ல வேண்டியிருப்பின் எதிராளி தன்னை வெகுவிரைவில் தோற் கடித்துவிடுவான்'' என்று கூறியி ருக்கிருரே. புரியவில்லையா?

இனி நாம் தலைவர்கள் என் னும்போது பாராளுமன்ற அங் கத்தவர் மட்டுமா தலைவர்கள்? தமிழ் காங்கிரஸ், இளைஞர் பேரவை, மகளிர் பேரவை போன்ற இயக்கங்களிலும் இதை விட இலைமறை காய்களாகவும் நின்று எத்தனையோ இளைஞர், யுவதிகள்,முதியவர்கள் போராட வில்லையா? இவர்கள் தலைவர்கள் இல்லையா? இதைவிட துடிப்பாற் றல் கொண்ட இளைஞர்கள் சிலர் ''புலி'' என்ற போர்வையில் அகில இலங்கையையே கலக்கிடவில்லையா? எட் டப்பர் கூட்டங்களை அழித்திட வில்லையா? இவர்கள் தலைவர்கள் இல்லையா ?

எனவே பொதுவாகக் கூறின் இன்றைய தமிழ் தலைவர்கள் (சகல துறைகளிலுமுள்ளவர்கள்) தனிநாடு என்ற ஒரேநோக்கோடு தளராது, தயங்காது, அயராது உழைக்கின்ருர்கள். உழைப்பார் கள். அவர்களது தனிநாட்டுக் கோரிக்கைதளரவில்லை. இதுவே எனது தளராத நம்பிக்கை.

## இப்படி இருக்கவேண்டும்

மரணம் எப்படி புனிதமானதோ அவ்விதமே யுத்தமும் புனித மானது. ஆனுல் மரணம் புனிதமான ஒரு வாழ்க்கையின் நுழைவாயிலைத் திறந்து விடுகிறதோ அப்படியே யுத்தமும் புனிதமான ஒரு லட்சியத்தை யுடையதாக இருக்க வேண்டும்.

—மாஜினி

# தமிழ்த் தலைவர்களின் தனி நாட்டுக் கோரிக்கை தளர்வடைந்துவிட்டது

1971 ஆம் ஆண்டு தந்தை செல்வாவின் தலைமையில் பெரும்பாலான தமிழ்த் தலைவர்கள் ஒன்றுகூடித் தமிழர் கூட்டணியை உருவாக்கி, 1974 பொதுத் தேர்தலில் தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து த. வி. கூட்டணி மாபெரும் வெற்றியை ஈட்டியது. இதனால் தமிழ் மக்களின் ஏகோபித்த தீர்ப்பின்படி 77, 78-ம் ஆண்டுகளில் தமிழ்த் தலைவர்கள் தனிநாட்டுக் கோரிக்கையை தளர்வடைய விடாது மும்முரமாக உழைத்தார்கள். வெளிநாடுகளுக்குச் சென்று தீவிரபிரச்சாரம் செய்தார்கள், பிறநாடுகளிலுள்ள தமிழர் இயக்கங்களை ஒன்றிணைத்துத் தனி நாட்டுக் கோரிக்கைக்காக உழைக்கவேண்டுமென்று உற்சாக மூட்டினார்கள். ஸ்ரீலங்கா அரசின் செலவிலும் சலுகையிலும் வெளிநாடு சென்ற தலைவர்கள் கூடத் தனிநாடுகாண உழைத்தார்கள். ஸ்ரீலங்கா அரசுக்கும் அமைச்சர்களுக்கும் தீவிர எதிர்ப்புக் காட்டினார்கள். எனவே, கோரிக்கை தளர்வடையாமலிருந்தது.

ஆனால் இன்று நிலை மாறிவிட்டது. தமிழ்த் தலைவர்கள் தமது கோரிக்கையில் நின்று திசை திரும்பிஅபிவிருத்திக்காக உழைக்கிறார்கள். மத்திய அரசின் நேரடிக் கட்டுப்பாட்டிலிருக்கும் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை அறவே வேண்டாமென்று மறுக்கத் தயங்குகிறார்கள். இதை யேற்றால் தமிழீழத்தையும் ஸ்ரீலங்கா அரசு ஆள்வதற்குத் தமிழ்த் தலைவர்களே ஆமோதிப்பதாக அமையும். எனவே, கோரிக்கை மேலும் தளர்வடைகிறது அல்லவா?

1979 ஆகஸ்டில் இலங்கைக்கு வந்த அமெரிக்க பாராளுமன்றக் குழுவுக்கு, திரு. தொண்டமான், இந்தியத் தமிழர்களை இலங்கைத் தமிழர்கள் அதிகாரம் செலுத்தி ஆளவிரும்பியே தனிநாடு கோருவதாகவும் இந்தியத் தமிழர்கள் இதனை எதிர்ப்பதாகவும் கூறியுள்ளார். பின்னர் திரு. தொண்டமானை அவரும் எங்களில் ஒருவரென்று பாராட்டியிருக்கிறார்கள் எம் தலைவர்கள். இவ்வாறு அமைச்சர்களை வரவேற்பதிலும், பாராட்டுவதிலும் எம் தலைவர்

பரிசு பெறுபவர் :

ஜீவறஞ்சன் பெர்னன்டோ
கண்டி வீதி,
மிருசுவில்.

கள் நேரத்தை வீணாக்கும் அதே வேளை அமைச்சர்களோ தனி நாட்டுக் கோரிக்கைக்கெதிராகப் பிரச்சாரம் செய்கிறார்கள். இதனால் தனிநாட்டுக் கோரிக்கை தளர்வடைந்து வருகிறது. 22-6-80 "வீக் எண்ட்"-ல் மிகாறு என்பவர் தமிழ்த் தலைவர்களிடையே பிளவுண்டென்றும் இதுவே பாராளுமன்றத்தில் அவர்களின் அமைதிக்குக் காரணம் என்றும் எழுதியுள்ளார். 19-6-80 "தப்ரபேன்" ஹோட்டலில் நடந்த றோட்டறி கழக விழாவில் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் பாராளுமன்றத்தில் இன்று எதிர்க்கட்சி செயலிழந்து விட்டதாகக் கூறியுள்ளார். வவுனியா மதவாச்சி இணைப்புச் சட்டமூலத்தைச் செயலிழக்கச் செய்தவர்கள் இன்று தம்கட்சி செயலிழந்து விட்டதாகக் கூறுவதென்றால் தலைவர்கள் தளர்வடைந்துவிட்டார்கள் என்பதே அர்த்தம்.

அத்துடன் இப்போது தமிழ்த் தலைவர்கள் நமக்குக் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் தனிநாட்டுக் கோரிக்கைபற்றி எடுத்துரைக்கத் தவறுகிறார்கள். உதாரணமாக அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற நடைமுறை பற்றிய கருத்தரங்கில் கோரிக்கையை வலியுறுத்தவில்லை. வானொலியில் கிடைத்த சந்தர்ப்பங்களிலும் தவறிவிட்டார்கள். எல்லாவிடங்களிலும் அபிவிருத்தி பற்றியே பேசுகிறார்கள். இவையனைத்தையும் பார்க்கும்போது "வரவர மாமியார் கழுதைபோல" என்ற கதையாக இருக்கிறது. எனவே தமிழ்த் தலைவர்களின் தனிநாட்டுக் கோரிக்கை தளர்வடைந்து விட்டது என்பதே எனது கருத்தாகும்.

பாராட்டுப் பெறுபவர்கள் :

- எம். பிலிப் இராஜதர்ஸ் குடத்தனை
- கே. ஆறுமுகம், கேகாலை
- ம. கி. அருள்ஞானம் ஊறணி
- இரா. பூபால், மடுறோட்
- எஸ். பெர்ணாட், புத்தளம்
- ஜெசிந்தா செல்வநாயகம் புத்தளம்
- அரியமலர், கிளிநொச்சி
- ஆ. தில்லைநாதர், மாங்குளம்.

கருத்துமோதல்

இளைஞர்களின் வெளிநாட்டு வேலைவாய்ப்பினால்

- நாடு முன்னேற்றமடைகிறது
- நாடு முன்னேற்றமடையவில்லை.

## வைகாசி—ஆனி இதழ்

பரிசு பெறும்

# அட்டைப்பட விளக்கம்

இம்முறை குடும்பத்திற்கென்றே ஒதுக்கப்பட்டு குடும்பநல சிறப்பிதழாக 'புதிய உலகம்' உருவாக்கப்பட்டுள்ளது. இவ்வட்டைப்படமானது குடும்பம் உருவாகும் ஆரம்ப நிலையை மையமாகக் கொண்டு காணப்படுகிறது.

அப்படத்தின் உருவ அமைப்பானது இருதயத்தைப்போல் காணப்படுகிறது. இருபாலாரினுடைய மோதிரத்தையும் காணமுடிகிறது. இவற்றுக்கிடையில் தீபம் எரிகிறதைக் காணமுடிகிறது.


இவற்றை மேலும் ஆராய்ந்தால் ஆணும் பெண்ணும் ஒருவருக்கொருவர் மாற்றி அணிந்துகொள்ளும் ஓர் அடையாளத்தினூடாக தங்களுடைய அன்பை எடுத்துக் காட்டுகின்றனர்.

இவ் ஆரம்ப அன்பு நிலையானது உள்மனதில், ஆம் இதயத்தில் பதிக்கப்பட்டு என்றும் வாழ்நாள் முழுதும் சுடர்விட்டு எரியவேண்டும். அப்போது தான் அக்குடும்பமானது சிறந்த குடும்பமாக வளரமுடியும்.

மஞ்சுளா யோசவ்
466 1/1, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

இப்போட்டியில் பல அன்பர்கள் கலந்துகொண்டு சிறப்பித்துள்ளர். அனைவருக்கும் எமது பாராட்டுக்கள். — ஆ. ர்.

# புதிய உலகம்



# விமர்சன அரங்கு



இளவாலை நாடக மன்றத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்ட புதிய உலகம் விமர்சன அரங்கு, இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியில் 27-7-80 அன்று இடம் பெற்றது. அரங்கிற்கு மாரீசன் கூடல் வித்தியாலய அதிபர் திரு. எக்ஸ். பெர்ணண்டோ அவர்கள் தலைமைதாங்கினர்.

தலைவரின் வரவேற்புரையைத் தொடர்ந்து 17-7-80 காலஞ்சென்ற எழுத்தாளர் 'திராடசையூரான்' (இ. பேனர்ட்) அவர்களுக்கு இரண்டு நிமிடம் மௌனஞ்சலி செலுத்தப்பட்டது.

விமர்சன அரங்கில் கொழும்பு பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் க. பேனர்ட், சட்டக்கல்லூரி மாணவன் பொன் பூலோகசிங்கம், மனிதன் பத்திரிகை குழுவைச்சேர்ந்த க. வசீகரன் 'புதுசு' பத்திரிகை ஆசிரியர், இளவாலை விஜேந்திரன் ஆகியோர் புதிய உலகம் சஞ்சிகையை விமர்சனம் செய்தனர்.

விமர்சகர்கள், தமது கருத்துரையில் 'புதிய உலகம்' முழுமையான புதிய உலகில் நுழையவில்லை, அதன் வாசலில்தான் இருக்கின்றது. அது ஒரு மத வட்டத்துள் கட்டுப்பட்டு இயங்குகின்றது. பிரச்சனைகளையெல்லாம் தொட்டு செல்கின்றதே ஒழிய தீர்வு காணும் பணியில் விலகி நிற்கின்றது. உங்கள் பார்வையில் புகழப்படும் பகுதிகளே நிறைய இடம் பெறுகின்றன. கட்டுப்பாடுகளை தகர்த்து வெளியேறி புதிய உலகம் செயல்பட வேண்டும் ஆதியாம் கருத்துக்கள் கூறப்பட்டன.

அதேவேளையில் புதிய உலகம் மிக மலிவான விலைக்குக் கிடைக்கின்றது என்பதையும், தரமானதும் பயனுள்ளதுமான ஆக்கங்கள் அதில் பிரசுரிக்கப்படுகின்றன என்றும் விமர்சகர்கள் பாராட்டத் தவறவில்லை. குறிப்

பாக சென்ற ஆனி — ஆடி இதழில் வெளிவந்த 'ஒரு அத்தியாயம் முற்றுப் பெறுகிறது' சிறுகதை, 'மாங்கல்லியத்தின் மகிமை' மற்றும் 'மேன்மைப் பணி புரியும் மேய்ப்புப் பணி நிலையம்' செவ்வி 'அமெரிக்க அனுபவங்கள்' ஆகியவற்றை புகழ்ந்துரைத்தனர்.

'அமெரிக்க அனுபவங்க'ளைப் பற்றிய கருத்துரை வழங்குகையில் கரைவையூர்ச் செல்வம் அமெரிக்காவின் புகழ் பாடுகிருர் என்றும், ஜனதிபதி ஜீம்மிக்கார்ட்டரை 'இந்த நாய் கடிக்காது குரைக்கும்' என்ற வார்த்தைகளைக் குறிப்பிட்டது வரவேற்கத் தக்கதல்ல என்பன போன்ற அபிப்பிராயங்களும் இடம் பெற்றன.

பார்வையாளராக வருகைதந்திருந்த வித்துவான் சந்தியாப்பிள்ளை, ஞாவி. ஜெகநாதன், பி. ஏ. சி· ஆனந்தராசா ஆகியோரும் கருத்துரை வழங்கினர்.

விமர்சகர்களுக்குத்துணை ஆசிரியர் நாவண்ணன், பொறுப்பாசிரியர் ஜே. நீக்கிலஸ், வெளியீட்டாளர் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆகியோர் பதிலுரை வழங்கினர்.

இவ்விமர்சன அரங்கை ஒழுங்கு செய்த இளவாலை நாடக மன்றத்தினர்க்கு எமது நன்றியைத் தெரிவிக்கின்ருேம்.

— ஆசிரியர், நிர்வாகக் குழுவினர்

## எழுத்தாளர்கள்

மக்களை நல்ல முறையில் பணியாற்றத் தூண்டவேண்டும். நமது பண்டைய பெருமைகளையும், மூதாதையர்களின் பெருமைகளையும், அவர்களின் பெருமைக்குரிய காரணங்களையும், அவர்கள் வீழ்ச்சி அடைந்திருந்தால் வீழ்ச்சிக்குரிய காரணங்களையும் விளக்கிச் சொல்ல வேண்டும்.

★ ★ ★

ஒருவன் தான் வாழும் இந்த உலகத்தைப் பற்றிய சரியான கருத்துக்களைத் தெரிந்துகொள்ள வேண்டும். அவன் மனம் எந்தத் துறையில் அதிகம் ஈடுபாடு கொள்கிறதோ அதில் பூரண அறிவு பெறல்வேண்டும்.

— மாஜினி

கண்டதைக் கண்டபடி - அதன் வழி
எண்ணியதை எண்ணியபடி எழுதுகிறேன்.



# அமெரிக்க அனுபவங்கள்

4

இராசையூர் செல்வா

மூச்சுவிடும் மாணவர்கள்!

கோடைகாலப் பரீட்சைகள் முடிவடைந்துவிட்டன. பல்வேறு மாணவர்களுக்குப் பல்வேறு அனுபவங்கள்: பதினொரு திங்கள்களாக மூச்சைப் பிடித்துக்கொண்டிருந்து பின்னர் ஆறுதலாக, அமைதியாகச், சுதந்திரத்தோடு மூச்சு விடக்கிடைத்த மகிழ்வோடு மாணவர்கள் மூச்சு விடுகிருர்கள். படிப்பிலும், பயிற்சியிலும், செய்கை முறைகளிலும், ஆய்வுகளிலும், பரீட்சைகளிலும் முழுமையாக ஈடுபட்டு இன்று காலை (ஆவணி 7 ) துயில் எழும்பொழுது ஏற்பட்ட ''விடுபட்ட'' அனுபவம், அனுபவித்தால்தான் புரியும்.

கலாநிதிப் பட்டங்களுடனும் முதுகலைப் பட்டங்களுடனும், இளங்கலைப் பட்டங்களுடனும், மாணவ மாணவியர் பல்கலைக்கழகங்களிலிருந்து வெளியேறுகிருர்கள் பெரும்பான்மையினரான மாணவ மாணவியர் இந்நாட்டினர். ஒரு சிறுபான்மை, உலகின் பல்வேறு நாடுகளிலிருந்து இங்கு கல்வி கற்க வந்தவர்கள். உதாரணமாக, சென்ற கல்வி ஆண்டில் 11,373 இளங்கலை மாணவமாணவியரும், 4093 முதுகலை மாணவ மாணவியரும் நியூ ஜோர்க் மாநிலத்தின் சிறக்கியூஸ் பல்கலைக் கழகத்தில் கல்வி கற்றுள்ளார்கள். இவர்களுள் 1250 மாணவ மாணவியர் வெளிநாடுகளில் இருந்து கல்விகற்க வந்தவர்கள். (இவர்களுள் ஒருவர் தமிழ் ஈழத்தில் இருந்து வந்தவர்)

உலகப் புகழ்

நூற்றுக்கணக்கான பல்கலைக் கழகங்களையும், கல்லூரிகளையும் கொண்ட இந்நாட்டின் முன்னணியில் நிற்கும் பல்கலைக்கழகங்களுள் சிறக்கியூஸ் பல்கலைக்கழகமும் ஒன்று. 15 வெவ்வேறு

கல்லூரிகளைத் தன்னகத்தே கொண்ட சிறக்கியூஸ் பல்கலைக் கழகம் தொடர்பியல் துறையில் இந்நாட்டில் முதலிடம் வகிக்கின்றது. S. I. Newhouse School of Public Communication என்ற பெயருடைய சிறக்கியூஸ் பல்கலைக் கழகத்தின் ஒருதுறைக் கல்லூரியான இத்தொடர்பியல் கல்லூரி இந்நாட்டில் மிகப்பிரசித்தி பெற்றுள்ளது. ஆண்டு தோறும் அனைத்துலக தொடர்பியலாளர் கருத்தரங்கை இக்கல்லூரியே நடத்த வேண்டுமென்பது தலைநகர்த் தலைவர்களின் (Washington Leaders) ஆசை. அவர்களின் ஆசை ஆணையாகிக் கடந்த சில ஆண்டுகளாக இக் கருத்தரங்கு இக்கல்லூரியில்நடைபெற்று வருகின்றது. இதுபற்றி ஏற்கனவே எனது கட்டுரையொன்றில் குறிப்பிட்டிருந்தேன். (புரட்டாசி-ஐப்பசி; 79) தொடர்பியல் கல்லூரியிலும், வெவ்வேறு கிளைத்துறைகள் உண்டு. பத்திரிகை, சஞ்சிகை, செய்தி, நிலைப்படம், விளம்பரம், பொதுமக்கள் தொடர்பு, திரைப்படம், வானொலி-தொலைக்காட்சி தொடர்பியல் ஆய்வு எனப் பல பிரிவுகள் உண்டு. விளக்கத்தை விரும்பி இவற்றை ஆங்கிலத்திலும் குறிப்பிடுகின்றேன். Newspaper Journalism, Magazine Journalism, News Journalism, Photo Journalism, Advertising, Public Relations, Filim, Radio-Television and Communication Research. இறுதி மூன்று துறைகளான - திரைப்படம், வானொலி-தொலைக் காட்சி, தொடர்பியல் ஆய்வு முதலியனவற்றில் இக்கல்லூரி உலகிலேயே முதலிடம்வகிக்கின்றது. கடந்த 32 வருடங்களாக இந்த இறுதி மூன்று கிளைகளையும் ஒன்று சேர்த்து முதுகலைப்பட்டப் படிப்பொன்றினை உருவாக்கித் திறமையாக அதனை நடத்தி வருகின்றனர். தொடர்பியல்துறை பேராசிரியர்கள் இப்படிப்பட்ட ஒரு பயிற்சியைப் பெற்றவர்கள் பலர் பரந்து விரிந்து கிடக்கும் இந்நாட்டின் பல்வேறு தொலைக் காட்சி நிலையங்களிலும், ஆய்வுக் கூடங்களிலும், தொடர்பியல் கல்லூரிகளிலும் பணிபுரிந்து வருகிறார்கள்.


**புதிய உலகம்**
**வாசகர் மாநாடு**

புதிய உலகம் வாசகர் மாநாடு ஒன்றை நடாத்தத் திட்டமிட்டுள்ளோம். இம்மாநாட்டில் கலந்து கொள்ள சந்தாதரர் மட்டுமே அனுமதிக்கப்படுவர். இதில் கலந்து உரை நிகழ்த்த விரும்புபவர்கள் எமக்கு முன்கூட்டியே எழுத்துமூலம் விண்ணப்பிக்க வேண்டும்.

மாநாடு இடம்பெறும் நாளும் இடமும் பின்னர் அறிவிக்கப்படும்,

—வெளியீட்டாளர்

சென்ற ஆண்டு (1979-80) இப்படிப்பை மேற்கொண்டவர்கள் 42 மாணவ மாணவியர். வெவ்வேறு சூழல்களிலிருந்து வந்த இம் மாணவ மாணவியருள் 33 அமெரிக்கர்கள். ஏனையஒன்பது மாணவ மாணவியர் வெளிநாட்டினர்கள். 16 மாணவிகளும், 26 மாணவரும் இவ்வாண்டில் மேற்கூறிய பட்டப்படிப்பை மேற்கொண்டவர்கள்.

### போட்டி நிறைந்த உலகம்

இம்மாணவர்கள் எதிர்பார்த்துச் செல்லும் உலகம் (குறிப்பாக அமெரிக்காவை வைத்துப் பார்க்கும் பொழுது) அவ்வளவு நம்பிக்கை ஊட்டுவதாக அமையவில்லை. பல்கலைக் கழகங்கள் பெரும்பான்மையும் மாணவர்களை இன்றைய அமெரிக்க நாட்டின் தேவைகளுக்கேற்பவே பயிற்றுவிக்கின்றன என்பது உண்மை தான். இப்படிப்பட்ட பயிற்றுவிக்கப்பட்ட மாணவர்களுக்கு வேலைகள் கிடைப்பது கடினமன்று. எடுத்த எடுப்பிலேயே இவர்களுக்குப் பெரிய பொறுப்புகளும், கை நிறையப் பணமும் கிடைக்கப் போவதில்லை. உதாரணமாகத் தொடர்பியலில்முதுகலைப்பட்டம் பெற்று வேலைப் பொறுப்பேற்கும் ஒருவருக்குக் கிடைக்கக் கூடிய ஊதியம் ஆண்டுக்கு 15,000-18,000 டொலர்கள்.

> **திருத்திக்கொள்க**
>
> தவிர்க்கமுடியாத காரணங்களால் எமது இந்த இதழ் தாமதமாகிவிட்டதற்காக வருந்துகிறோம், 25-ம்பக்கத்தில் குறிப்பிட்டதுபோலல்லாது புரட்டாசி — ஐப்பசி இதழுக்கான ஆக்கங்களை 30-9-80 முன்னர் அனுப்பி வைத்தால் போதுமானது.
>
> — ஆர்.

விலைவாசி மக்களைப் 'பரதேசிக'ளாக மாற்றி வரும் இவ்வேளையில் ''பணம், பணம், பணம்' என்று மக்கள் 'பேயா'கத் திரிகிறார்கள். இம்மக்கள் பெரும்பாலும் பணத்தைப்பற்றியே பேசுகிறார்கள். 'உணவு, உடை, சுகமானவாழ்வு' இவற்றையே தேடுகிறார்கள். இவை மூன்றும் குறைவின்றிக் கிடைத்தால்-அடுத்தபடியாகப் - 'பெயர், புகழ், பதவி, ஆட்சி' இவற்றையே நாடுகிறார்கள் உலகில் ''அமெரிக்க நாடுதான் முதலாவது'' என்ற ஓர் எண்ணம் வெறும் அரசியல் போக்கு மட்டுமல்ல, பொதுமக்களிடையேஆழமாகப்பதிந்துவிட்ட ஓர் எண்ணமும் கூட என்பதை மறுக்க முடியாது.

போட்டி நிறைந்த நாடு, இது. போட்டியில் வெற்றிபெறுபவன் பெருமையுடனும், புகழுடபணத்துடனும் வாழுகின்றான். ஏனையவர்கள் வழியில் விடுபட்டு விடுகிறார்கள்.

வழிகளில் விடுபவர்களின் தொகை ஆயிரக் கணக்காகப் பெருகுகின்றது. தொழில் இன்றிப்பணமின்றி ஆயிரக்கணக்கான மக்கள் அவதியுறுகிறார்கள் கிழமைதோறும் இவர்களுக்கு, ஆட்சி ஊதியம் வழங்குகின்றது. 'இந்த ஊதியம் போதும், உழைக்காமல் பெறும் பணம் சுகமாக உள்ளது' என்ற தத்துவத்தைக் கொண்டோர் பலர் "நான் கொடுக்கும் வரிப்பணத்தில் இவர்கள் வளர்வதா?" என்று வாதிடும் உழைப்பாளிகள் சிலர்.

பதினாறு–பதினேழில்

கல்லூரிப் பட்டப் படிப்பு தொழிலுக்கும், அதன்வழி பணத்துக்கும் வழிவிட்டாலும், பெரும்பான்மையினரால் கல்லூரிக்குச் செல்ல முடிவதில்லை. கல்லூரிப் படிப்பு மிக விலையாக உள்ளது. ஆயிரக்கணக்கான டொலர்களை ஆண்டு தோறும் கல்லூரிகள் விழுங்கி விடுகின்றன. பெற்றோர் பணத்தில்படிக்கும் மாணவ மாணவியரைவிட, வங்கியில் கடன்பட்டும், தாமே உழைத்தும் படிக்கும் மாணவ மாணவியரின் தொகையே ஏராளம். பாடசாலைப் படிப்பு முடிந்ததும் (வயது 17 - 18), (எமது ஜீ.சி.ஈ உயர் நிலை) பெற்றோர் பணத்தைப் பொறுத்த மட்டில் கைகழுவி விடுவார்கள் "கொந்தளிக்கும் கடலில் நீயே எதிர் நீச்சல் போடு" என்று விட்டு விடுவார்கள் இந்நிலை இங்கு சர்வ சாதாரணமாக அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது. பிள்ளைகளும் அதற்குத் தயாராகி விடுகிறார்கள்.

(இவ்விடத்தே, எமது நாட்டுச் சூழலையும் இந்நாட்டின் சூழலையும் நேரடியாக வைத்து ஒப்பிட நான் விரும்பவில்லை. காரணம், நேரடி ஒப்பு நோக்கு தவறானது. பொருளாதார — சமூக — அறிவியல் சூழல்களில் பெரிய வேறுபாடுகள் இரு நாடுகளிடையேயும் உண்டு. இவை பெரும்பாலும் இரு நாடுகளிடையே உள்ள வாழ்க்கை முறைகளைப் பாதிப்பதினால், சமூகப் பொருளாதார, பல்கலைக்கழக அமைப்புகளையிட்டு விரிவாக எழுதாமல், நேரடி ஒப்பு நோக்குச் செய்யின் இது விஞ்ஞான அறிவியல் ரீதியாக எழுதிய கட்டுரையாக அமையாது.)

பதினாறு - பதினேழிலேயே பொறுப்பேற்று, பெற்றோர் கட்டுப்பாட்டில் இருந்து தம்மை மகிழ்வோடு அவிழ்த்துக் கொள்ளும் இந்த இளைஞரைப் பற்றிப் பல கட்டுரைகள் வரையலாம். 'சுயமகிழ்வுக்காக (மாற்றானைப் பாதிக்காத அளவில்) எதையும் செய்யலாம்- அது வேறொருவருடைய சுதந்திரம் (permissiveness)' என்ற போக்கில் வரையறையின்றி வளர்ந்து விட்ட இந்த இளைஞர்கள் பலரிடையே இன்று ஒரு திருப்புமுனை ஏற்படத் துடிப்பதை உணர முடிகின்றது.

அதே வேளை வீண் செலவிலும், அனைத்திலும் பெரியனவற்றையே விரும்பியும் (பெரிய வீடு, பெரிய கார், பெரிய ஹொட்டல் பெரிய கல்லூரி), என்றும் புதிய

னதான் வேண்டுமென்றும் வாழ்ந்து வந்த முதிய தலைமுறை இன்றைய சூழலில் தங்கள் வாழ்க்கை முறையைப் பரிசீலனை செய்கிறார்கள். உறுதியான குடும்பம், நல்ல தொழில், நல்ல அக்கம் பக்கம், அமைதி, சுதந்திரம், சேமிப்பு இவைதான்முக்கியமென இவர்கள் சிந்திக்கத் தொடங்கி விட்டார்கள்.

இந்த இரு முனைகளும் ஒன்றையொன்று சந்திக்குமா? ஒன்றுடன் ஒன்று இணையுமா? இச்சந்திப்பிலும், இணைப்பிலும் ஒரு புதிய அமெரிக்க நாடு உருவாகுமா?

கார்த்திகை ஜனாதிபதித்தேர்தலும், அதையொட்டி நடைபெற இருக்கும் ''கொங்கிரஸ்'' சபைத் தேர்தலும் ஓரளவு மேற்கூறிய கேள்விகளுக்குப் பதிலாக அமையலாம் என்பது ஓர் எதிர்பார்ப்பு.

(வளரும்)

17–7–80 எம்மை விட்டுப் பிரிந்த திராட்சையூரான், இளவாலை இளவல் எனும் பெயர்களில் எழுதி வந்த எழுத்தாளர் இ. பேணார்ட் அவர்களுக்கு எமது அஞ்சலிகளைச் செலுத்துகின்றோம்.

அவரது இழப்பு இளந்தலைமுறைகளின் எழுத்துலகில் பெரும் இழப்பாகும். அவரது பிரிவால் துயருறும் அவர் குடும்பத்தவர்க்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கும் அதேவேளையில் அவரது ஆன்மசாந்திக்காக இறைவனை இறைஞ்சுகிறோம்.

ஆசிரியர்—நிர்வாகக் குழுவினர்

# புதுமைப் பதில்

செ. யேசுதாசன்
செம்மண்தீவு

**ஒருவரைப் பற்றி இன்னொருவரிடம் அவதூறு சொல்லிவிட்டு நல்லவர்மாதிரி நடமாடுபவர்கள் பற்றி தங்கள் கருத்து ?**

இவர்களை 'புற்று' என்று கூறலாம். இவர்கள் மனம் விஷஜென்மங்களின் உறைவிடம். 'புற்று நோய்' என்று சொன்னால் கூட இந்த நோய் முற்றும்வரை வெளிப்படாது. அதுபோன்ற பயங்கரவாதிகள்.

ஜீ. ஏ. டேவிட்
அடம்பன்

**எமது நாட்டில் சில இளைஞர்கள் சீதனப் பேய்பிடித்து ஏழைப் பெண்களை விலைபேசுகிறார்களே இவர்கள் பற்றித் தாங்கள் கூறுவது ?**

பிடித்திருப்பது பேய்தான் என்று உணர்ந்த வகையில் அது விரட்டி அடிக்கப்பட வேண்டியது தான். அதை ஓட்டும் மந்திரவாதிகள் உங்களைப் போன்ற இளைஞர்கள்தான்.

எஸ். சில்வெஸ்டர் பயஸ் பெர்னாண்டோ
கொழும்பு 13

**இன்றைய பொருளாதாரப் பிரச்சினைகளை சமாளிக்க தங்களின் ஆலோசனை என்ன ? தாங்கள் எவ்வாறு சமாளிக்கிறீர்கள் ?**

உத்தியோகம் புருஷ இலட்சணம் எனும் கொள்கை மாறி உழைப்பு மனித இலட்சணம் எனும் எண்ணம் வளர வேண்டும். வெளிநாடு செல்லும் எம்மவர்கள் வெளிநாடுகளை சுவர்க்கம் என்று எண்ணி அங்கேயே வாழ முற்படாமல் தாயகத்திற்குத் திரும்பவேண்டும். திரும்பி வருபவர்கள் டி.வி யும் 'ரூ இன் வண்'ணோடும் வந்து வங்கியில் பணத்தைப் போட்டு வட்டியை எடுத்து வாழ்க்கையை நடத்தும் எண்ணத்தை விடுத்து, தொழிற்சாலைகளை—உற்பத்தித் துறைகளில் ஈடுபட்டு பலருக்கு தொழில் வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும். தங்களது இரண்டாவது வினவுக்கு விடை......! உஸ்...... இரகசியம். பிறகு..........என்பாடு திண்டாட்டம்.

ஜசிந்தா செல்வநாயகம்
புத்தளம்

**தன் கண்ணில் உள்ள வளையை எடுக்காமல் மற்றவன் கண்ணிலுள்ள துரும்பை எடுக்கும் சீர்திருத்த வாதிகன் பற்றி தம் கருத்து என்ன ?**

இருபதாம் நூற்ருண்டின் பரிசேயக் கும்பல்கள். இவர்களுக்காக இயேசு முதல் இற்றை வரை எத்தனையோ மகான்கள் இறத்துவிட்டார்கள். இவர்கள் திருந்த இன்னும் எத்தனைபேர் வேண்டுமோ ?

❦ ❦ ❦

ரேகன் அன்ரனி
பண்டாரவளை

**நமது நாட்டில் ' தார்மீக சமுதாயம் ' என்ற பேச்சு செயலளவில் உள்ளதா அல்லது ஏட்டளவில் உள்ளதா ?**

தார் = படை, மீ = உயர்ச்சி, கம் = முதன்மை. இப்படியாக தார்மீகம் என்ற சொல்லை பிரித்துப் பார்க்கும்போது தமிழ் அகராதியில் பொருள் காணக்கிடக்கிறது. நமது நாட்டில் படைகளுக்கு முதன்மையும் உயர் அந்தஸ்தும் கொடுக்கப்படுகிறது என்பதும் நாம் அறிந்த உண்மை. ஆதலால் தார்மீகம் செயலளவில் உள்ளது என்பதே பொருந்தும்.

❦ ❦ ❦

செல்வி ஹெலன் ரோசாரி
கொழும்பு—13

**பணம் இருக்கும்போது நல்ல குணத்தை இழந்தவனது எதிர்காலம் எப்படி இருக்கும்?**

சொகுசான வாகனத்தை ஓட்டிக்கொண்டு செல்பவன் நிதானத்தை இழந்து மதுபோதையில் இருப்பது போன்று எந்த நேரத்திலும் எதிலும் மோதி விபத்தில் விழவேண்டியதுதான்.

## அட்டைப்பட விளக்கப் போட்டி

இவ்விதழின் அட்டைப் படத்தை வரைந்து உதவியவர் சிரித்திரன் ஆசிரியர் திரு சிவஞானசுந்தரம் அவர்களாகும்

அட்டைப்பட விளக்கத்தை எழுதி 30-9-80 முன்னர் எமக்கு அனுப்பிவையுங்கள்

விளக்கம் முழுத்தாளின் ஒரு பக்கத்துள் அடங்க வேண்டும். தெரிவு செய்யப்படும் மிகச்சிறந்த விளக்கத்திற்கு சன்மானம் வழங்கப்படும்

# உங்கள் பார்வை

மோ. மாற்கு யேசுதாசன்,
சுன்னாகம்.

புதிய உலகமே ! நீ திங்களொரு மலராக மலரும் நாள் எந்நாளோ ? என்று அந்நாளை ஆவலுடன் எதிர் பார்க்கிறேன்.

செல்வதி அந்தோனிமுத்து
ஊர்காவற்றுறை.

குடும்ப நல இதழ் பல குடும்பங்களுக்கு வழி காட்டு கிறது. கரவையூர்ச் செல்வத்தின் கட்டுரை. அமெரிக்க ரின் வாழ்க்கை முறையை எமக்கு உணர்த்துகிறது. அவர் பணி வாழ்க !

ஜே. பிறிம் றேஸ் டயஸ்,
தலைமன்னார்.

வைகாசி — ஆனி குடும்ப நல இதழ் இக்காலப் பெற்றோருக்கு ஒரு சிந்தனைச் சுடர். போராட்டம் கவிதை எழுதிய ஜெக்கம்மா கல்யாணிக்கும், குடும்பம் ஒரு சமூகம் என நிலை நிறுத்திய ஆசிரியருக்கும் பாராட்டுகள்.

செல்வி. அ. யசிந்தா,
புதுக்கமம்.

சிந்தையும் செயலும் கவிதையை எழுதிய கவிஞர் பரிபூரணனுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

செல்வி மேரிகிறேஸ் பெஞ்சமின்,
முல்லைத்தீவு.

சென்ற இதழில் கருத்து மோதலும், பேரங்கள் பேசிடும் இளைஞர் கவிதையும் என்னைக் கவர்ந்தன. அமெரிக்க அனுபவம் சுவைக்கிறது. அது தொடர்ந் தும் வரவேண்டும்.

றேகன் அன்ரனி,
பண்டாரவளை.

ஜெக்கம்மா கல்யாணியின் போராட்டம் சிந்திக்க வைத்தது.

சிங்கராசா அமலராணி,
வலையல் மடம்.

''ஓர் அத்தியாயம் முற்றுப் பெறுகிறது'' நெஞ்சை நெகிழ வைத்தது. புதுமைப் பெண்பகுதி மிகவும் நல்லது. அருட்திரு குணசீலன் அடிகளாரின் பேட்டி பயன்மிக்கது. அமெரிக்க அனுபவம் மிக ஜோர்.

செல்வி. எல். ஆர். நிர்மலா சூசைமரியாள்,

குடும்ப நல இதழின் ஒவ்வொரு இதழும் அறிவுக்கு விருந்து. புதிய உலகம் விரைவில் எமக்குக் கிடைக்கக வழி செய்யுங்கள்.

செ. ஜேசுதாசன்,
செம்மண்தீவு.

பேரங்கள் பேசிடும் இளைஞர் கவிதை நன்றாக இருந்தது. கவிஞருக்கு எம் பாராட்டுகள்.

எ. பேமளா,
யாழ்ப்பாணம்.

'போராட்டங்கள்', 'பேரங்கள் பேசிடும் இளைஞர்' கவிதைகள் பிரமாதம். இவற்றிய எழுதிய ஜெக்கம்மா கல்யாணிக்கும், பொன். பாலராஜனுக்கும் எமது வாழ்த்துக்கள்.

செ. ஞானராஜன்,
செம்மான் தீவு,

'' எம்மனதில் எழுச்சி வேண்டும் கவிதை நன்று. எழுதிய ரவீந்திரகுமாரைப் பாராட்டுகிறேன்.

தவத்திரு தனிநாயக அடிகளார் புதிய உலகம் சஞ்சிகைக்கு இறுதியாக எழுதிய ''வீரமாமுனிவர்'' பற்றிய சிறப்புக் கட்டுரை எமது அடுத்த இதழில் இடம் பெறும்.

# எமது அஞ்சலிகள்

ஞான முகில் தவழ்ந்த மலை
நந்தமிழின் முதிய தலை
தனிநாயகத் திருமகனை
தாரணி மண் மூடியதோ !



1–9–80 அமரராகிவிட்ட தமிழ்த்தூது தனிநாயகம் அடிகளாரின் இறுதிச்சடங்குகள் 3–9–80ல் இடம்பெற்றது. அன்று நடந்த இரங்கற் கூட்டத்திற்குத் தலைமைதாங்கிய பேராசிரியர் கு. நேசையா அவர்களின் தலைமையுரை உள்ளே.

புனித வளன் கத்தோலிக்க அச்சகம், யாழ்ப்பாணம்